

சிலம்பு ௨௫ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௨, தை | பரல் ௬
பிப்ரவரி, 1951

தனிப்பெரும் புலவர்
சலசலோசனர்

[சித்தாந்த பண்டிதர், புலவர், ப. இராமநாத பிள்ளை]

நாடும் ஊரும்

முத்தமிழ்த் துணையால் முறைதிறம்பாது வாழும் முதியவர் சான்றோர் எனப்படுவர். சான்றோர் வாழும் நாடே நாடாகும். ஏனைய கடும்புலி வாழும் காடாகும். ஒழுக்கமே உயர்திணை. ஒழுக்கம் இன்மையே அஃறிணை. மக்கள் உருவு எய்தினால்மட்டும உயர்திணையாதல் முடியாது. மக்கட் பண்பு எய்தினாற்றான் உயர்திணையாதல் முடியும். பிறரால் சுட்டப் படுவது பண்பையே. இவ்வுண்மை புலப்படுப்பான் வேண்டியே ஆசிரியர் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனார்,

"உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே" —தொல். சொல். ௧

என்று ஆணையிட்டருள்வாராயினர். உலகம் "பண்புடையார்ப் பட்டுண்டு" என்பது தமிழ்மறை. பண்பு பலவாயினும் எல்லாம் அடங்கும் தலைமைப் பண்பு ஐந்தாகும். அவை: அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ப.

இவ்வுண்மை,

"அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்" —திருக்குறள், ௯௮௩

என்னும் பொய்யா மொழியால் விளங்கும்.

இயற்றமிழ் உயிராகவும் இசைத்தமிழ் உளமாகவும் நாடகத்தமிழ் உடலாகவும் கொண்டு நனி நாகரிகம் இன்மையுற

நடவாதிற்கும். அதனாலேயே முத்தமிழ் வல்லார் முறை நிறுத்தும் திறவோர் ஆயினர்.

> "என்றும் இயலுயிராம் ஏற்ற இசையுளமாம்
> நின்றவுடல் நாடகமாம் நேர்."

ஐம்பெரும் பண்புகள் செம்மையுற வாய்த்து 'ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் வாழும்' நாடு தொண்டை நாடு. இந்நாட்டகத்து நீர்வளம் நிலவளம் குடிவளம் நெறிவளம் நிரம்பப் பெற்றது 'திருஎவ்வுளூர்' ஆகும். இவ்வூரின்கண் "இரு மூன்று மரபின் ஏனோர் பக்கமும்" என்று உள்ளதை உள்ளவாறு உரைக்கும் செந்நாப்புலவர் தொல்காப்பியரால் உரைக்கப் பெற்ற வணிக வேளாளர் மரபு சிறந்துள்ளது.

தந்தையார்

அம்மரபில் பெரும்புலமை வாய்ந்து திகழ்ந்தவர் திரு. இராமசாமிச் செட்டியாரவர்கள் ஆவர். இவர்கள் செந்தமிழ்ப் புலமையும் சிவனெறிப் பற்றும் ஒருங்கமைந்த பெருந்திருவினர். ஒழுக்கம் உயிரென ஓம்பும் விழுப்பஞ்சேர் ஒண்மையர். அருளாற்றலால் மருள்தீர்ந்த மாண்பினர். 'அருச்சனை பாட்டேயாகும்' என்னும் அருள் முறைப்படி செந்தமிழ்ப் பாப்பாடிச் சிவவழிபாடு செய்யும் செல்வர். உடலூணினும் உயிரூணாகிய வழிபாட்டை ஒல்லும்வகை ஓவாது உஞற்றிவந்த உண்மையர். திருவெண்ணீறும் கண்மணியும் விளம்பும் அஞ்செழுத்தும் உண்ணீர்மையாகக் கொண்டு ஒழுகும் ஒழுக்கினர். திரு எவ்வுளூர்ப் பிள்ளையார் மேலும், இறைவன் இறைவியர் மேலும் இன்தமிழ்ப் பதிகங்கள் இயற்றியுள்ளார்கள். பலவகை யாப்பும் உலகியல் முறையும் பாங்குறத் தெரிப்பது கலம்பகமாகும். அஃது எல்லாராலும் எளிதிற் பாடத்தக்க தன்றென்பதினாலேயே "கலம்பகத்துக்கு இரட்டையர்கள்" எனக் கல்வி வல்லார்களாலும் புகழப் பெற்றுள்ளது. அத்தகையதொன்று "திரு எவ்வுளூர்க் கலம்பகம்" அந்நூலும் நம் இராமசாமிச் செட்டியாரவர்களால் பாடப்பெற்றுள்ளது. மேலும், திரு ஆலவாய், திருக்குடந்தை, திருமாயூரம், திருவிடைமருதூர் முதலிய திருவூர்க் கடவுளர் மேலும் செந்தமிழ்ப் பதிகங்கள் பல பாடியுள்ளார்கள். அங்கதம் (அறம்) பாடுதலிலும் வல்லர்.

வணிகம்

இவர்கள் வணிகத்தின் பொருட்டுக் கோநகராகிய சென்னையம்பதியில் வந்து குடியேறினார்கள். "பிறர் பொருளும் தம் பொருள்போற் பேணிச் செய்யும்" பெற்றியராய் வணிகம்

நடத்தினர். 'கொள்வது மிகைபடாமல் கொடுப்பது குறைபடாமல்' உள்ளம் உவந்து உடையானை நினைந்து வணிகஞ் செய்தனர். இம்மையும் மறுமையும் ஒருங்கு தருவதாய் செம்மையூதியம் பெற்றுத் திகழ்ந்தனர். இவர்தம் தோற்றமும் புலமையும் காண்பார், இவர் தொன்மைக் கூலவாணிகன் சாத்தனார் போன்ற சீரியர் என்பர். பட்டினத்துப் பிள்ளையார் முதலியவர்களை யொத்த பண்பினர் என்பர்.

வாழ்க்கை

நல்லறமாம் இல்லறத்தை நன்னாளால் கைக்கொள்ள நாடினர். அறிவும் அழகும் அன்பும் பொறையும் கற்பும் பொற்பும் காதலும் செறிவும் தெய்வ நாட்டமும் சேரப்பெற்ற நங்கை திருமதி பூங்காவனத்தம்மை யாரைச் செந்தமிழ்த் திருமணஞ் செய்தனர். அன்பொருமித்து அகம்புறத் தொண்டுகளை 'அணியும் அமிழ்தும் ஆவியும் ஆகிக், கண்ணொளிபோற் கலந்து இல்வாழ்க்கையை நடத்தினர். விருந்துபேணல் சுற்றம் ஓம்பல் ஈகை இன்சொல் பணிவு கனிவு ஒழுக்கம் நனிமிகக் கொண்டு நாயனடிமறவாது வாய்மைத் தூயராய் வாழ்ந்து வந்தனர்.

அடியார்க்கு அமுது ஊட்டுந்திறத்தில் ஆர்வம் மிக்கவராய்ச் சோர்வின்றி நாளும் ஒழுகினர். 'பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தற்குப் பத்தராகி அரும்பு நன்மலர்கள் கொண்டு' அம்மையப்பர் திருவடியைச் செம்மையுறப் போற்றுவர். திருமுறை ஓதா வழிபாடு உயிரில் உடலும், உப்பில் உணவும், ஒழுக்கில் உயிரும் போன்று விழுப்பம் எய்தாதென்பதும், விழலுக்கு இறைத்த நீராம் என்பதும் விளங்கிய திறத்தராய்த் திருமுறையோதி வழிபட்டு வந்தனர். 'ஈயாமாக்கள் இயம்பும் தீமொழியாம்' இல்லையென்பது இவர்கள்பால் இல்லையென்பதே எஞ்ஞான்றும் எய்திற்று. அதனால் 'இல்லாண்மை ஆக்கி நல்லாண்மையாம்' நற்பெயர் பூண்டனர்.

பிறப்பு

'மனையறத்தில் இன்பமுறும் மகப்பெறுவான் விரும்பித்' தவம் புரிந்தனர். புனைமணிப்பூண் காதலர் ஒருமூவர் தோன்றினர். அவர்கள் முறையே, பாலசுந்தரர், சிவானந்தர், சலசலோசனர் எனத் திருப்பெயர் பெற்றவர் ஆவர். (சலசம்-தாமரை, விலோசனர்-கண்ணர்) சலசலோசனர் என்பது தாமரைக்கண்ணர் என்னும் தமிழ்ப் பெயரால் வழங்கப்பெறும். தாமரைக்கண்ணர் இளமையிலேயே தெய்வ நாட்டமும் தீந்தமிழ்ப் பற்றும் கூர்ந்த அறிவும் தேர்ந்த மொழியும் உடையவராய்த் திகழ்ந்தனர். பிள்ளையார் வழிபாட்டில் பெரும் பற்றுக்

கொண்டு ஒழுகினர். இவற்றை எல்லாங் கண்ட உலகோர் "தந்தை அறிவே மகன் அறிவு" என்னும் தன்மைக்கு எடுத்துக் காட்டாவார் தாமரைக் கண்ணரே என்று சாற்றினர்.

படிப்பு

எண்ணரும் திண்ணைப் படிப்பு நண்ணிய பின்னர், வண்ணப் படிப்புப் பல படிக்க எண்ணினர். சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் சேர்ந்து கற்றனர். அக்காலத்து மேன்மை உவல்லியம் மில்லர்த்துரை மகனர் கல்லூரி முதல்வராய்த் திகழ்ந்தனர். திரு. பரிதிமாற் கலைஞரென்னும் சூரிய நாராயண சாத்திரியார் தமிழ்ப் பேராசிரியராய் வீறுகொண்டு வீற்றிருந்தனர் இருவர்பாலும் ஆங்கிலமும் தீந்தமிழும் பாங்குறப் பயின்றனர். பயிலுங் காலத்தே புதிய பாட்டுப் பாடுவது மிகவும் எளிதாக இருந்தது நம் தாமரைக்கண்ணர்க்கு. அப்பாட்டும் இனிமையும் எளிமையும் திட்பநுட்பமும் இயற்கையாகவே செறிந்து திகழ்ந்தது. யாவரும் போற்றிக் கொண்டாடினர். கல்லூரிப் பாடங்களில் முதன்மையுறத் தேர்தலும் பரிசு பெறுதலும் மிக எளிதாக இருந்தன. உடன்பயில் மாணவரும் ஒருசாலை மாணவரும் ஒருங்கு போற்றினர். விரும்பி நண்பு பூண்டனர். இவர் போல் நாமும் எழிலுற வேண்டுமென்று விழைந்தனர். ஆசிரியர்களும் இவரின் அன்பும் அடக்கமும், வாய்மையும் தூய்மையும், அறிவும் செறிவும், பொறையும் நிறையும், பொய்யா ஒழுக்கமும் கண்டு இறும்பூது எய்திப் புகழ்ந்தனர். "இவன் தந்தை என்னோற்றான் கொல் என்னும் சொல்" இவர்பால் பட்டாங்காய்த் திகழும் பான்மை கண்டு முட்டாச் சிறப்பு இஃதென மொழிந்தனர்.

நூல்யாப்பு

கட்டிளமைக் காலத்தே திரு எவ்வுளூர்க் கணபதி என்னும் ஆனைமுகக் கடவுள்மேல் செந்தமிழ்ப் பதிகம் பாடி வழுத்தி வந்தனர்.

உண்மையான வாழ்க்கை ஒருமணத்தால் ஆவது என்பதும், மறுமணத்தால் பெற்ற மக்களையும் வாடவிடுவர் என்பதும், நல்லோர்க்குப் பொறுக்கலாகாத் துன்பம் மலைபோல் வரினும் உறுதி தளராது உண்மை கடைப்பிடித்துப் பொறையும் நிறையும் தாங்கி "அழிவிலான் உற்ற இடுக்கண் இடுக்கட்படும்," என்பதை மெய்ப்பித்து வென்று புகழ் மேம்படுவர் என்பதும், நல்ல நண்பர் உற்றுழி யுதவி ஒல்லும் வகை ஊன்றும் நிலையினராவர் என்பதும், தீயோர் கழிகாமத்தராய்ப் பழிபாவங்கட்கு அஞ்சாது படைத்து மொழிந்தும், கடைத்தொழில்

புரிந்தும், காதலர்ப்பிரித்தும், சூது பல இயற்றியும் உலகைக் கெடுப்பதே உலையா முயற்சியாய் உழன்று இறுதியில் எண்ணரும் துன்பெய்தி இகழப்படுவர் என்பதும், காடுறைய நேரினும் குடிப்பிறந்தார் “ நகையீகை இன்சொல் இகழாமை நான்கும் ” தகைபெறக் கொண்டு சான்றோராய் வாழ்வரென்பதும், ஆண்மையும் ஆற்றலும் உடையார் அறந்துணையாகத் தீமையை அழித்து நன்மையை வாழ்விப்பர் என்பதும் உலகுக்கு உணர்த்த வேண்டுமென உன்னினர். என்னை? தாம் உணர்ந்த உண்மையை உலகுக்கு ஒளியாமல் உணர்த்துவதே உயர்ந்தோர் ஒழுக்கம் ஆகலின்.*

இம்முறைகளைத் தம் கல்லூரிப் படிப்புக்கு இடையே நூல் வழியாக்கத் துவங்கினர் தாமரைக்கண்ணர். அந்நூலும் கதை தழுவிய நாடகமாக இருப்பது நலமென எண்ணினர். உலகப் புகழ் எய்திய ஆங்கிலப் புலவர் பெருமான் செகப்பிரியர் செய்த பலவேறு நாடகங்களுள் தலைசிறந்தது சிம்பலைன் (Cymbeline) என்னும் நாடகம். அதைச் சரசாங்கி எனப் பெயர் தந்து ஒரு நூலாக ஆக்கினர். அம்மட்டுமன்று, நம் நாட்டு நாடகப் பேராசிரியர், திரு. இராவ்பகதூர். சம்பந்த முதலியாரவர்களுடன் சரசாங்கியாகவே கோலங்கொண்டு அவையோர் வியப்புற நடித்துக் காட்டிப் பேரும் புகழும் பெற்றனர். திரு. முதலியாரவர்கள் அஞ்ஞான்று அளவிறப்பப் பாராட்டி வாழ்த்தினர். அவர்கள், இவர்களின் தகையை உரைக்கப்புகின் கண்ணீர் உகுத்துப் பரிவுகூர்கின்றனர். இந்நூல் அரை நூற்றாண்டுகளுக்கு முன் வெளிவந்துள்ளது. செய்ந்நன்றி மறவாச் சீர்மையால் ஆசிரியர் தம் கல்லூரி முதல்வர் மேன்மை உவல்லியம் மில்லர் துரையவர்களுக்கு இந்நூலை, உரிமை ஆக்கியுள்ளார்கள். இஃது ஆசிரியரின் உளநிலை விளக்கும் விழுப்பமாகும். இப்பொழுது நம் கழகத்தாரால் செம்மையுற இரண்டாம் பதிப்பாக வெளிவருகின்றது. இதனை ஒவ்வொருவரும் கற்று, உண்மையுணர்ந்து ஒழுகி வண்மையுற வாழவேண்டுவது இன்றியமையாததென்க. இந்நூல்ஆசிரியர் உரைநடை, பல்வகைப்பா, வண்ணப்பா முதலிய முறையுறயாத்துள்ளார்கள். மேலும், “முன்னோர் மொழி பொருளேயன்றி, அவர் மொழியும், பொன்னேபோல் போற்றும்” பொய்யா வாய்மைக்கு எடுத்துக் காட்டாகத் தொல்காப்பியம், திருக்குறள் முதலிய சங்கமருவிய

---

*ஒருமணமே திருமணமாம் உறுதியறம் அன்புடையார் ஒழியாத் துன்பம் பெருமலைபோல் எய்துறினும் பின்புநலம் பெற்றுயர்வர் மறுமணத்தால் வருந்தீங்கின் களப்பிலவாம் மக்களையும் வாட்டுவிப்பர் வாய்மை நண்பர் அருஞ்சிறப்பும் தீயோர்தம் அழிமுறையும் அறிகசர சாங்கிக் கண்ணே.

நூற்களும், திருமுறை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், நளவெண்பா, நைடதம் முதலிய நூற்களும் விளக்கும் நயஞ்சேர் திருப்பாட்டுக்கள் பல இடையிடையே வேண்டும் இடங்கள் தோறும் ஆண்டுள்ளார்கள். அவ்வவ் இடங்களில் தாம் பாடிய பாட்டுக்களும் பலவுள்ளன. படிப்போர் இடம்நோக்கி உணரின், பாடல்கள் எவ்வளவு பொருத்தமாக இருக்கின்றன என்று இயைபெண்ணி மகிழ்வர்.

புகழுரை

நூலையும் நூலாசிரியரையும் போற்றி மெய்யுரை நுவன்றோர் பலராவர். அவருள் தலைசிறந்தவர் "மனோன்மணீய" ஆசிரியர் பேராசிரியர், இராவ்பகதூர். திரு. P. சுந்தரம் பிள்ளை எம். ஏ. அவர்கள், கிறித்துவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. வி. கோ. சூரியநாராயண சாத்திரியார் பி. ஏ. அவர்கள், கயப்பாக்கம் திரு. இ. சதாசிவ செட்டியார் பி. ஏ. அவர்கள் முதலியோர் ஆவர்.

போற்றும் செயல்

ஆசிரியர் "சொல்லியவண்ணம் செய்யும் அருமையை எளிமையாக்கிச் சொல்லுவதும் எளிமையே," என நடித்துக் காட்டிய திறம் வியக்கத்தக்கதன்றோ? பார்மின்! ஆசிரியர் நாடகத்துட் பெய்திருக்கும் நயங்களை நவில்தொறும் நாநயம் பயக்கும், உள்ளுதொறும் உள்ளம் உவக்கும்; உணருந்தொறும் உயிர் இனிக்கும். இத்தகைய நூலணி நம் தமிழன்னைக்கு அணிந்து தம் கடமையைக் காலமுண்டாக ஆக்கிய ஆசிரியரைக் கருதி வாழ்த்துவோமாக. நாமும் அவர் வழிபற்றித் தமிழன்னைக்கு நூலணி அணிவோமாக.

நயம்

விரிவஞ்சி நாடகத்துள் சில நயங்களை ஈண்டுக்காட்ட விழைகின்றனம். அழகானந்தனின் களவுப் பிரிவால் கலக்க முறும் சரசாங்கி, முல்லைக்கொடிகளைப் பார்த்து மொழியும் மொழிகள் :—

> "ஏ! முல்லைக் கொடிகளே! கணவனை நினைந்து இப்படியும் ஒரு பெண் ஏங்குவாளோ என்று என்னை நகையாடி இகழ்கின்றீர்களே! இகழாமல் எனது வேண்டுகோளுக்கிரங்கி நீர் தலையசைத்துச் சென்ற வழியைக் காட்டினீரானால், என்றும் உம்மை மறவாத எனக்குப் பேருதவி புரிந்தவராக மாட்டீரோ?"

துன்மதியால் வஞ்சிக்கப்பட்டு அழகானந்தன் சரசாங்கியின் கற்பில் ஐயுற்று அவளைக் கொன்றுவிட வேண்டுமெனப்

பிழைபடத் துணிகின்றான். நண்பன் சுகுணனுக்கு எழுத்து வழி அறிவிக்கின்றான். சரசாங்கி நடுக்காட்டில் அவ்வெழுத்தைக்கண்டு ஆற்றொணக் கொடுந்துயரெய்தி நெஞ்சழிந்து புலம்புகின்றாள்.

"கைகேசி மனந்திரியக் கற்பித்த கூனியைப்போல்
மையார்கண் மடவாரோ மைந்தரோ மண்ணுலகில்
ஐயாவென் காதலனை யாரோவிக் காரியத்தைச்
செய்வாயென் றிப்பொழுது சிந்தையுறக் கற்பித்தார்."

சரசாங்கி ஆண் உடையோடு காட்டில் களைப்புற்றுச் செல்லுமிடம் அறியாது தள்ளாடிச் செல்லுகின்றாள். பசி தலைக்கேறப் பத்தும் பறந்துபோம் என்னும் பண்பினை நம் ஆசிரியர் அவள் மாட்டு வைத்துக் காட்டுகின்றனர்.

"ஐயா ; உங்களைப் பார்த்தால் இரக்கமுடையவர்களாகத் தோன்றுகின்றது! நீங்கள் என்னை மன்னித்து அருள் புரியவேண்டும். எனக்கு யாதொரு தீங்கும் புரியீர்கள்! இங்குக் கதவை நீண்டநேரம் தட்டிப் பார்த்தேன். பிறகு பசியால் காதடைத்துக் களைத்திருந்தேன் ஆதலால், நீராவது இருக்கலாமென்று நினைத்து உள்ளே நுழையப் பாலும் பழமும் இருந்தமை கண்டு அதிற் சிறிது அருந்தினேன். திருட்டு எண்ணத்துடன் வந்தேனல்லேன்."

விருந்தோம்பும் முறையைக் குணநிதி விக்கிரமன் வீரசேனர் வாயிலாக வலியுறுத்தும் பான்மையினைக் கூர்ந்து நினைமின்.

"நீ இங்கேயே எங்களுக்கு விருந்தினராய் இரு! நீ அஞ்ச வேண்டியதில்லை! என் தம்பியைப்போலவே உன்னை நினைத்தேன்! நீ என் அருமைத் தோழனுய்!"

நம்பிக்கையால் ஆகும் நன்மையை வலியுறுத்த,

"இவர்கள் சிறந்த மனிதர்கள், இவர்களை நம்பலாம். இன்று இங்கு வரும்போது காக்கை வலமாயிற்று! ஏதோ நன்மை உண்டென்று நினைத்தேன்! நல்ல வேளையாய் ஆண்வேடம் தரித்து வந்தோமே! நல்லது இவர்களை அண்ணன்மாரென நினைத்து இரண்டு மூன்று நாள் இங்கிருப்பேன்!"

மயங்கிக் கிடந்த சரசாங்கியை இறந்தவளாக நினைத்து வேண்டுவ செய்து வருந்திப் புலம்பிய பாட்டுக்களுள் ஒன்று,

"நடுவனெனப் பேர்கொண்டு நட்டாரைப் பிரித்திடுவாய்
படுதொழிலைக் கைக்கொண்ட பாதகனே கொடுங்கூற்றே
அடுதொழிலைக் கைக்கொள்ளா அருமைபெறுஞ் சுந்தரனுக்
கிடர்செய்தாய் நன்றோவீ தியம்பிடுவா யியம்பிடுவாய்."

நம் இளம் பெரும் புலவர் தம் இருபத்தொன்றும் அகவைக்குள் 'கலைத்தலைவன்' (எம். ஏ.) பட்டம் பெற்று எழிலுற விளங்கினர். யாவரும் இப் பெருந்தகையார் வழிப் பற்பல நூல் நம் அருந்தமிழ் அன்னைக்கு மணி அணியாய் வரவேண்டும்

என எதிர் பார்த்தனர். நம்பினர். ஆற்றலும் அறிவும் தோற்றமும், மொழிபெயர்ப்பு வண்மையும் நுண்மாண் நுழைபுலத் திண்மையும் ஒருங்கு வாய்ந்த ஒப்பில் ஒருவரை, அறிவுடைய உலகம் எப்படி நம்பாமல் இருக்கும்.

பெரும்பேறு

எல்லாருடைய நம்பிக்கையும் கொன்னே கழியத் தன்னேரில் புலமைச் செம்மல் இருபத்திரண்டாம் அகவையாம் கட்டிளமைப் பருவத்தே இவ்வுலகை விட்டகன்றனர். அவர்தம் பிரிவிற்கு அல்லலுற்று இரங்காதார் எவரே! கல்லூரி முதல்வர் மேன்மை உவல்லியம் மில்லர்த் துரை மகனர் எதிர்பாராத, ஈடு செய்ய முடியாத இவ் இழப்பினைக்கேட்டுக் கையறு நெஞ்சினராய்க் கண்ணீர் வார்ந்த முகத்தினராய் இளம் புலவர் இல்லத்துக்கு வல்விரைந்து வந்தனர். ஆவியகன்ற யாக்கைப் பொலிவினைக் கண்டு ஆராத்துயரெய்தி அழுதனரென்ப. நல் அறிவு நின்ற யாக்கை செல்வப் பொலிவுடன் ஆவியகன்ற பின்னும் திகழும் வாய்மையை எவரும் கண்டு ஏத்தினர்.

நம் புலவர் வழிவழிச் செம்பொருட்டுணிவும் சிவனெறிச் சார்வும் சேர்ந்தவராதலால் சிவனடி நீழல் எய்தி இன்புறுவர் என்பது உறுதி. அவர்க்கு நாம் செய்யும் கைம்மாறு, அவர் நூலைக் கற்றலும் கற்பித்தலும், வாங்கலும் வாங்குவித்தலும் செய்து எங்ஙனும் பரப்புவதேயாம். அவரது திருவுருவப் படத்தினைக் கல்லூரி நூல்நிலையம் கழகம் முதலியவற்றில் தக்கவாறு திறந்து வைத்தல் முதலிய நினைவுக்குறி செய்தலுமாம்.

இவர் செய்த முறைபோன்று பிறமொழி வல்லார் நம் தமிழ் மொழிக்கு அப்பிறமொழிக்கண் தாம் தம் நுண்மாண் நுழைபுலத்தால் கண்டுணர்ந்த கருத்துக்களைத் தொகுத்தும் விரித்தும் தொன்மைத் தமிழ் மரபமைய நூல் யாத்துப் பரப்புதலும் சிறந்த கைம்மாறாகும். அம்மையப்பர் அடியிணைக்கீழ் அவர் என்றும் செம்மையுற இன்புற்று வாழ்வாராக.

“சச்சந்தன் மறுமணத்தைத் தடைசெய்குணர் நிதிச்செல்வன் [சார்ந்த மக்கள்
பொச்சமிலா விக்கிரம வீரசே னர்வளர்த்தல் சுகுண நண்பன்
அச்சமில்சீர்ச் சரசாங்கி அழகானந் தன்முதலோர் அறத்தால் [வாழ்தல்
கச்சகுணத் துன்மதிசங் கிரசேக ரக்கனகர் கதியுங் காணே.”

பதிற்றுப் பத்து

[வித்துவான், மு. ந. வேலாயுதனார், புதுவை.]

இலக்கிய நூல்களுள் எட்டுத்தொகையே மிகவும் பழமை வாய்ந்தது. அத்தொகை நூல்கள்,

“ நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் போற்றுங் கலியோடு அகம்புறமென்
றித்திறத்த எட்டுத் தொகை ”

என்பனவாம். அவற்றுள் பதிற்றுப் பத்து நான்காவதாகக் குறிக்கப்பட்டுள்ளது. தமிழ்நூலுக்குப் புலவர்கள் நூலியற்றிய ஆசிரியர் பெயரையும், செய்யுளின் அளவையும், பொருளையும், வடிவையும் பின்பற்றிப் பெயா கொடுத்திருக்கின்றனர். அந்த முறையை அடியொற்றி, இந்நூலுக்குப் பதிற்றுப்பத்து என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. பத்து பத்துக்கள் உண்டு. ஒவ்வொரு பத்திலும் பத்துப் பாக்கள் அடங்கியிருக்கின்றன. ஒவ்வோர் பத்தையும் ஒவ்வோர் புலவர் பாடியிருக்கின்றனர். முதற் பத்தும், பத்தாம் பத்தும் கிடைக்கவில்லை. கிடைத்த செய்யுட்களில்கூட அடிகள் குறைகின்றன. முதற் பததோ, அல்லது பத்தாம் பத்தோ என்று ஐயங்கொள்ளும் வண்ணம், சில செய்யுட்சள் காணப்படுகின்றன. அவற்றிலும் அடிகள் குறைகின்றன.

பொருளிலக்கணம் அகம், புறம் என இருவகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. பதிற்றுப்பத்து புறத்தைச் சார்ந்தது இந்த நூல் இலக்கியத்திற்கு மாத்திரமன்றி வரலாற்றாசிரியர்களுக்கும் நல்ல விருந்தளிக்கிறது. இதில் சேர அரசர்களைப் பற்றியே எல்லாப் புலவர்களும் பாடியிருக்கின்றனர். அரசர்களின் வீரம், வெற்றி, கொடை, நாடுகாத்தலிற் சிறப்பு, புலவர்களிடம் அன்பு, அவர்களுக்களிக்கும் பரிசில், குடிகளிடம் உள்ள பேரன்பு, இல்லாளுடன் வீற்றிருக்கும் சிறப்பு முதலியன கூறப்பட்டிருக்கின்றன.

சேர அரசர்கள் செருக்களத்தில் பகைவரைத் தோற்றோடச்

இந்நூலில், குமட்டூர் கண்ணனார், இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன்மீது இரண்டாம் பத்தையும், பாலைக் கௌதமனார், பல்யானைச் செல்கெழுகுட்டுவன்மீது மூன்றாம் பத்தையும்,

காப்பியாற்றுக்காப்பியனார், களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல்மீது நாலாம் பத்தையும், பரணர், கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன்மீது ஐந்தாம் பத்தையும், காக்கைபாடினியார் நச்செள்ளையார், ஆடுகோட்டுச் சேரலாதன்மீது ஆறாம் பத்தையும், கபிலர், செல்வக்கடுங்கோ வாழியாதன்மீது ஏழாம் பத்தையும், அரிசில்கிழார், தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை மீது எட்டாம் பத்தையும், பெருங்குன்றூர்கிழார், இளஞ்சேரல் இரும்பொறைமீது ஒன்பதாம் பத்தையும் பாடி இருக்கின்றனர். அரசர்கள், கவிஞர்களை ஆதரித்து அவரவர் தகுதிக்கேற்றவாறு நாட்டின் வருவாயும், பொன்னும், பொற்காசும், கவிஞர் விருப்பப்படி மலைமீது ஏறி, தேர்ந்து பார்த்தெடுத்த நல்ல நிலங்களும் பரிசிலாக அளித்தனர்.

சேர அரசர்கள், புலவர்களைப் பாராட்டிவந்ததால் தமிழ் இலக்கியங்கள் உருக்கொண்டன. அவ்வரும்பெரும் இலக்கியங்களுள் ஒன்றாகிய இப் பதிற்றுப்பத்துக்குப் பழைய உரை ஒன்றுண்டு. இருந்தாலும், சங்கநூல் பயிலும் மாணவர்க்கு அது பற்றாது. இக்குறையைக் குறிப்புரையால் போக்கி வைத்த பெருமை, தண்டமிழ்த்தாயின் தனிப்பெரும் புதல்வர் டாக்டர், உ. வே. சாமிநாத ஐயரவர்களைச் சார்ந்ததாகும்.

இரண்டாம பத்தின் பதிகத்தில், அரசனின் வீரத்தைக் கூறும்போது, முருகக்கடவுளின் செயலை ஒப்பிட்டுப் புலவர் கூறுகின்றார். முற்காலத்தில் வாழ்ந்துவந்த சூரவன்மா என்னும் பகைவனை ஒழிப்பதற்கு முருகன், மலைபோன்று உயரும் அலைகளையுடைய கடலில் இருந்த காவல்மரமாகிய மாமரத்தை வெட்டினான். இங்கு ஒன்று கவனிக்கவேண்டும். காவல்மரமென்பது ஒரு நாட்டின் எல்லைப்புறத்தே அரணாக ஓங்கிவளரும் மரமாகும். பகைவர்கள் ஊருக்குள் புகுவதற்குமுன், அம் மரத்தை வெட்டிவிடுவார்கள். அப்படி வெட்டப்பட்ட மரத்தைக்கொண்டே முரசு செய்வார்கள். எனவே, காவல் மரமாகிய மாமரத்தை முருகன் வெட்டினான். பின் வென்றிச்சிறப்பால் யானைமீது ஊர்ந்தான். இச்செயல்களையெல்லாம் சேர மன்னனுக்குச் சார்த்தி அமைக்கப்பட்டன.

“ வரைமருள் புணரி வான்பிசி ருடைய
வளிபாய்ந் தட்ட துளங்கிருங் கமஞ்சூல்
நளியிரும் பரப்பின் மாக்கடல் முன்னி
அணங்குடை யவுண ரேமம் புணர்க்கும்
சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந் தாங்கு ”

என்று கூறப்பட்டிருத்தலை நோக்கலாம்.

எப்படிச் சேரமன்னன், பகைவர்களை ஒழித்தான் என்று செய்தி மிகவும் விளக்கமாகவும் இயற்கைக்கு முரணின்றியும் காணப்படுகின்றன. பகைவர்கள் எதிர்த்து நிற்பாரல்லவா? அங்ஙனம் எதிர்த்தவர்களை, வேல்கொண்டு பிறர் எவராலும் முடியாதவாறு, அவர்கள் மார்பகத்தைத் துளைத்துவிட்டான். துளைக்கப்பட்ட அப் புண்ணிலிருந்து இரத்தம் வடிகிறது. நீல நிறம்போன்ற அகழியில் உள்ள நீர், வீரர்களின் இரத்தம் பாய்வதால் அகழி முழுதும் குங்குமம்போலச் செந்நிறமாய்விட்டது. இவ்வாறு அழித்தபின் அரண்கடந்து பகைவர் காவல்மரமாகிய கடம்பமரத்தை வெட்டி, புகழ்ச்சிக்குரிய வெற்றிகொண்டான். எனவே, பகைவர்களை வஞ்சியாது, வெற்றிகொள்வதே மற வேந்தர்க்கழகு. வஞ்சித்து வெற்றிகொள்வது வெற்றியாகாது.

இதனை,

“மைந்து பொருளாக வந்த வேந்தனைச்
சென்று தலையழிக்குஞ் சிறப்பிற் றென்ப”

என்ற தொல்காப்பியப் புறத்திணைச் சூத்திரத்திற்கு விளக்கங் காண வந்த நச்சினார்க்கினியர், “அறத்தினலன்றி வஞ்சனையாற் கொல்லுதலும், தேவரால் பெற்ற வரங்களால் கொல்லுதலும் சிறப்பாகா,” என்று கூறுகின்றார்.

அரசர்கள், கல்வி, ஈகை, ஆட்சி முதலியவற்றில் நன்கு புகழ் அடையலாம். ஆனல், எல்லாப் புகழைக் காட்டினும் வீரத்தின் மேம்படுதலே சிறந்த புகழ். இதைக் குமட்டூர் கண்ணனார் என்ற புலவர் ‘மறம் வீங்கு பல்புகழ்’ என்று சிறப்பிக்கின்றார். இதுவே, ஒரு செய்யுளின் பெயராகவும் அமைகிறது.

சேர மன்னர்களின் வீரர்கள் மாத்திரம், பகைவர்களை நொறுக்கி வெற்றி கொள்வதில் வல்லவர் என்று நினைக்க வேண்டாம். மன்னனது முரசுகூட, தன் தொழிலால் பகைவர்களை விரட்டி நல்ல வெற்றியை அடைந்திருக்கிறது. எவ்வாறெனின், போர் முரசு கேட்டதுமே, மாற்றார்கள் ஆற்றாது அச்சத்துடன் ஓட்டமெடுக்கலாயினர். காரணம் அம் முரசின் ஒலியே பகைவரின் வயிற்றில் கனலை மூட்டிவிடும். அம் முரசொலி கேட்பதற்குமுன் வீரத்தைக் கொண்டிருந்த பகைப்புல மறவர்கள், இனித் தங்கள் கருத்து முற்றுப்பெறாதென் றுணர்ந்து வெருவியோடுவர். இக்கருத்தாலேயே ‘வலம்படு வியன்பணை’ யென வெற்றி முரசைச் சிறப்பிக்கின்றனர்.

அரசனின் வெற்றியைப் பரணர் என்னும் புலவர் அழகாக எடுத்துக் காட்டுகின்றார். வீரர்கள் பொன்னாற் செய்த தும்பை

மலரை அணிந்துகொண்டு, பகைவர் மதிலைக் கடந்து செல்கின்றனர். அவர்கள், அம்புகள் பொருத்தப்பட்ட தூணியைக் கொண்டிருக்கின்றனர். அதில் உள்ள அம்புகள் மிகவும் கூர்மை வாய்ந்தவை. பகைவர்களை ஒழிக்கவல்லன. தூணிக்குப் புற்றும் அம்புக்குப் பாம்பும் உவமைகள். புற்றில் உள்ள பாம்பு எந்த நேரத்திலும் வெளியே புறப்பட்டு இன்னல் செய்ய வல்லது. அதுபோலவே, தூணியாகிய புற்றில் உள்ள அம்புகள் நச்சுக் கனலைக் கக்கி, மாற்றாரை வேற்றுலகிற்குக் கொண்டுபோகச் செய்யவல்லன. அம்புகளை எறிவதற் கேற்ற வில்லோ வளைந்து, காரியத்தைச் சாதிக்கக் கூடியது; ஆனால், வீரனின் மனம் ஒரு போதும் வளையாதது.

கையில் கொண்டுள்ள வேல் எப்படிப்பட்டது? ஆண் யானைகளின் மேல் எறிந்ததால், அவ்வேல் அதைக்குத்திக் காயப்படுத்தி வடுக்களைப் பெற்றதாகும். மதம் பொருந்திய ஆண் யானையையும் எதிர்த்துநின்று, தன் வேலினால் கொல்லுந் தொழிலுடைய மறவன் மரணத்திற்கு ஒருபோதும் அஞ்சுவதில்லை. யாக்கை நிலையாமை என்ற தத்துவத்தை உணர்ந்தவன் ஆதலால், அவன் மனத்தில் வீரமே வீற்றிருந்தது. உயரிய உள்ளத்தையும் வீரத்தையும் ஒருசேரக்கொண்ட வீரர்களை 'விழுமியோர்' என்று ஆசிரியர் பரணர் பகர்வதில் வியப்பொன்றுமில்லை. இதையே,

> "பொலம் பூந்தும்பைப் பொறிகிளர் தூணிப்
> புற்றடங் கரவி னொடுங்கிய வம்பின்
> நொசிவுடை வில்லி னொசியா நெஞ்சிற்
> களிறெறிந்து முரிந்த கதுவா யெஃகின் விழுமியோர்."

என்று கூறுகின்றார்.

மன்னர் உயிர்களிடத்தில் அன்பும் பகைவரிடத்தில் மிகக் கொடுமையுங் கொண்டிருந்தனர். அவர்களிடத்தில் கண்ணோட்டம் காட்டுவதில்லை. போரில் பகைவர்கள் மடிந்து பிணக் குவியலாய்க் கிடப்பர். போர்க்களம் குருதிபடிந்து செங்களமாகும். இத்தகைய அழிவையும் அரசன் கண்டு இரங்குவதில்லை. ஆனால், பெருமிதங் கொள்வான். எனினும் புலவர்கள் மாத்திரம் பெரிதும் இரங்குவர்.

சேரமான், புலவர்களை எவ்வாறு உபசரிக்கின்றான் என்பதை உணர்த்தவந்த ஆசிரியர், அழகாக எடுத்துக் காட்டுகிறார். ஒரு புலவர் பரம்பரையாக வறுமையால் விழுங்கப்பட்டவர். அவர் குன்றுகள் நிறைந்த வழியைக் கடந்து அரசனைக் காண வருகின்றார். அரசன் ஆட்டு ஊனுடன் வெண்சோறிட்டுக்

கள்ளின் தேறலைக் கொடுத்து உபசரிக்கின்றான். புலவர் வாழ்ந்து வரும் வீடு மிகவும் கெடுதலான நிலையிலுள்ளதால், உடுத்திக் கொண்டிருக்கிற ஓர் ஆடையும் செல்லால் அரிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு அரிக்கப்பட்ட கந்தையானது பருந்தின் சிறகு எவ்வாறு மண் நிறத்தைப்போன்று புள்ளி புள்ளியாகக் காணப்படுகின்றதோ, அதுபோன்ற தோற்றமுடையது. இந்த விதமான கந்தையை அகற்றிப் பட்டுத்துணி கொடுத்து மன்னர் உபசரிக்கின்றார். கந்தைக்குப் பருந்தின் சிறகு உவமையாகக் காட்டப்பட்டிருத்தல், எவ்வளவு பொருத்தமாகவும் இயற்கைக்கு மாறுபடாததுமாகக் காணப்படுகின்றது?

இன்னும் ஓர் உவமை. பகைவர்களின் வளப்பம் பொருந்திய ஊர் அழிக்கப்பட்டது. இயமன் உடலினின்று உயிரைப் பிரித்தால் எவ்வாறு உடலானது நேரஞ் செல்லச்செல்ல அழியுந்தன்மை மிகுந்து செல்கின்றதோ, அதுபோல் பகைவரின் ஊரும் சிறிது சிறிதாக அழிவுறுகிறது என்ற கருத்தை, 'கூற்றடூஉ நின்ற யாக்கைபோல' என்ற சொற்றொடரால் குறிப்பிட்டிருக்கின்றனர்.

சேர அரசர்கள், கடலைக்கடந்து சென்று தங்கள் வீரத்தைக் காட்டி, வெற்றி பெற்றிருக்கின்றனர் என்ற செய்தி நன்றாய்க் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நிற்க, இந்திய நாடு பிறநாட்டு மக்களை உபசரித்து வரவேற்பதில் மிகவும் மகிழ்ச்சிகொண்ட நாடு. பிறநாட்டில், கெடுதல் நிலவுவதைக்கண்ட மக்கள், அந்நாட்டைவிட்டு நம் நாட்டைத் தேடி வருகின்றனர். இந்தியா இலட்சக்கணக்கான மக்களுக்குப் புகலிடந்தந்து ஆதரித்து வருவது மிகவும் வியப்பாகும். இந்திய நாட்டினர்க்கு இக்குணம் இன்றோ அல்லது நேற்றோ காலப் போக்கில் அமைந்ததென்று நினைக்கலாகாது. ஏனெனில், சேரலாதன் ஆட்சி புரிந்தபோது, அரசன் கட்டளையைத் தாங்கி முரசறைவிப்போர்,

"அரணங் காணாது மாதிரம் துழைஇய
நனந்தலைப் பைஞ்ஞிலம் வருக விந்நிழல்"

தங்கள் ஊர் பாதுகாப்பின்றி, 'எங்கு நல்ல ஊர் கிடைக்குமென்று திசைகளெல்லாஞ் சென்று தேடிய பரந்த உலகிலுள்ள உலக மக்கள், எங்கள் நாட்டில் வந்திருக்கக் கடவர்' என்று அறிவிக்கின்றார்கள். இவ்வாறு, அரசர்கள் தங்கள் தேசத்தவர்கட்கு மாத்திரமன்றி, உலக மக்கள் எல்லோருக்கும் நன்மை செய்வதிலேயே நாட்டமுடையவரா யிருந்தனர்.

இன்னும், நாட்டின் முதன்மைத் தொழிலாகிய உழவு தொழிலை ஆதரித்துச் செல்வ நிலையை உயர்த்தினர். வேளாண்மைத் தொழில் செய்வோர் இரண்டு வகுப்பினராகக் கூறப்படுவர். அவரை வரிசையாளர் என்றும், காணியாளர் என்றும் கூறுவர். வரிசையாளர் என்போர் வாரம், குத்தகை முதலியன தந்து நிலத்தை உழுதுண்போர். காணியாளர் என்போரே உழுவித்துண்போர். இவர்களே நிலத்திற் குரியவர். உழுதுண்போரும் உழுவித்துண்போரும் தங்களுக்குள் எத்தகைய பகையும், சச்சரவுமின்றி வாழ்ந்து வந்தனர். நாட்டில் நல்ல மழை பெய்து வந்ததால் நோயும் பசியும் தொலைந்தன. வளப்பமுள்ள நாட்டில் நோயும் பசியும் தலைகாட்டுமா? தட்ப வெப்பத்தினாலும், இயற்கை மாறுதலினாலும், நாட்டில் நல்ல விளைவில்லாததாலும் நோய் உண்டாகிறது. உணவுப்பொருள் உண்டாக்கற் குறைவு, மக்கள் வேறுபாடு, வர்த்தக மந்தம் முதலியவற்றின் விளைவால் பசி உண்டாகிறது. இவை யிரண்டும் ஒரு நாட்டில் இல்லையென்றால் அந்நாடு பொன்னுடாகும்.

"உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு"

என்று வள்ளுவரும் கூறினர். இதையே பதிற்றுப்பத்தில்,

"குடிபுறந் தருநர் பாரமோம்பி
அழல் சென்ற மருங்கின் வெள்ளி யோடாது
மழை வேண்டு புலத்து மாரிநிற்ப
நோயொடு பசியிகந் தொரீஇப்
பூத்தன்று பெருமநீ காத்த நாடே"

என்று புலவர் கூறுகின்றார்.

இனி, இப்போது நம் நாட்டில் எங்கும் மரங்கள் நடப்பட்டு வருகின்றன. தேசத்தலைவர்கள் வழி காட்டுகிறார்கள். இது நமக்குப் பழமையான பண்பாடாகும். சுமார் 1800-வருடங்களுக்கு முன்னுலேயே நம் முன்னோர்கள் மரம் நட்டு வளர்த்தலை 'தேசப்பணி'யாகக் கொண்டார்கள். இதை,

'நன்மரந் துவன்றிய நாடுபல தரீஇ'

என்ற அடியால் அறியலாம். அஃதாவது 'நல்ல மரங்கள் நிறைந்த நாடுகள் பலவற்றை எமக்குத் தந்து' என்று கருத்துச் செல்கிறது. மேலும் பழங்கள் தரக்கூடிய மரங்களையும், கிழங்குகளையும் நன்றாய்ப் பயிரிட்டு வந்திருக்கின்றார்கள். நாட்டின் சிறப்பைக் கூறும்போது, உணவுப் பொருள்களாகிய பழங்களும் கிழங்குகளும் மிகுதியாய்ப் பயிரிட்டு வந்தனரென்றால் அந்நாட்டு மக்கள் எவ்வளவு உண்டபோதிலும் அவ்வுணவுப் பொருள்கள் முட்டுப்பாடில்லையாம். இதை,

'பழனுங் கிழங்கும் மிசையற வறியாது' என்ற அடியால் உணரலாம்.

மற்றோரிடத்தில் 'அவரை முதலிய விதைகளைச் சர்க்கரைக் கட்டியோடு சேர்த்து மக்கள் உண்டு வந்தனர்,' என்று கூறப் படுகிறது. வழிப்போக்கர்களுக்கு உதவி செய்யவே பாதைகளின் ஓரத்தில் மரங்கள் நட்டு வந்தனர். நுண்ணிய மணலும் பருக் கைக் கற்களுமிருந்த பாலைநிலத்தில் செல்லும் மக்களுக்குப் பயன்படுதற்காக நெல்லிமரங்களை நட்டுவந்தனர். மக்கள் நிழலில் தங்கி அதன் காயை உண்டு நாவறட்சியைப் போக்கிக் கொண்டு வழிச்செல்வர்.

சிலர் ஆட்சிசெய்யுங் காலத்தில் மழையும், நீரும் குறை வின்றி யிருந்தும், நல்ல விளைவு உண்டாகாது என்று பதிற்றுப் பத்தில் குறிப்புரை காணப்படுகிறது. எனவே, இக்காலத்தில் கூட மழையின்றி விளைவுகள் குறைவுற்றால் ஆட்சியின் நேர்மை யின்மையைக் குறிக்கும் என்று மக்கள் கருதுகின்றனர். இந் நினைப்பு அக்காலத்திலும் உண்டு. ஆனால், இதற்கு இடமே யின்றிச் சேர மன்னர்கள் காலத்தில் நிலத்தில் நல்ல விளைவுண்டா யிற்றென்று குறிப்பிட்டிருக்கின்றனர்.

பின், தமிழ்நாட்டில் சில ஊர்ப்பெயர்கள் ஆசிரியரால் எடுத்துக்காட்டப்படுகின்றன. 'கொடுமணம்' என்றதோர் ஊருண்டு. அவ்வூரில் அணிகலன்கள் செய்வதில் தேர்ந்த தொழிலாளர்கள் இருந்தனர். இன்னும் கொற்கைத் துறை முகம், முத்துக்குப் பேர்போனது. ஆனால், கபிலர் 'பந்தர்' என்ற ஊரைக் குறிப்பிடுகின்றார். இவ்வூர் கடற்கரையை அடுத்துள்ள தென்பதும், அங்கு முத்துக்கள் குளிக்கப்பட்டன வென்றும் தெரிகிறது.

> "கொடுமணம் பட்ட நெடுமொழி யொக்கலொடு
> பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர்"

என்ற அடிகளாலும்,

> "கொடுமணம் பட்ட வினைமா ணருங்கலம்
> பந்தர்ப் பயந்த பலர்புகழ் முத்தம்"

என்ற அடிகளாலும் அறியலாம்.

பண்டைக் காலத்தில் தமிழர்கள் வானநூலிற் பெரும் புலமை பெற்றிருந்தனர். சோதிட நூலில் வல்லுநர்களா யிருந்துவந்தனர். செவ்வாயும் வெள்ளியும் சேர்ந்தால் மழை பெய்யாது என்ற கருத்தை,

"அழல்சென்ற மருங்கின் வெள்ளி யோடாது"

என்றுவரும் அடியால் உணரலாம். அழல் என்றால் செவ்வாய்க்குப் பெயராகும். மழைக்கோளாகிய வெள்ளி வடக்குத் திசை சென்றால் மழை உண்டாகும். தெற்கில் சென்றால் மழை இலதாகும் என்ற கருத்தும் மற்றோரிடத்தில் காணப்படுகிறது.

இன்னும், இசையில் பன்னெடுங்காலமாகத் தமிழர்கள் இன்பம் கண்டுவருகின்றனர் என்ற செய்தி, இந்நூலில் ஆங்காங்கே காணப்படுகிறது. அக்காலத்தில் இசைப்புலவர்கள் தூய தமிழ்ச்சொற்களை இசையின் பற்பல கூறுபாட்டிற்கு இட்டுவந்தனர். அவ்வாறு பார்த்தால் 'மறுகுசிறை' என்றதோர் துறையுண்டு. அது, "ஆரோசண அவரோகணக் கிரமம் என்று இக்காலத்தில் சொல்வதைப் போலிருக்கலாம்," என டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் கூறியிருக்கிறார். ஊரின் நடுவே இசைமன்றங்கள் இருந்துவந்தன. ஆனைத்திந்திய வானொலி நிலையங்களில் இக்காலத்தில், இசைப்புலவர்கள் பாடுவதுபோல, ஊர்மன்றங்களில் இசைப்புலவர்கள் பாடுவர் என்ற கருத்தை,

"மன்றம் போந்து மறுகுசிறை பாடும்
வயிரிய மாக்கள்"

என்றுவரும் அடிகள் அரண்செய்கின்றன.

இளைஞர்கள் கூட்டமொன்று கடவுள்வாழ்த்து இசைக்கின்றது. யாழ் வாசிப்பதில் தேர்ச்சிபெற்ற இளைஞர்கள் யாழுடன் குழுமியிருக்கின்றனர். நன்றாய்ச் சுருதி அமைந்த மத்தளமும், ஒரு பக்கத்தில் மாத்திரம் அடித்தலையுடைய மத்தளமும், மூங்கிலின் கணுக்களை அறுத்து அவற்றால் இயற்றப்பட்ட பெருவங்கியம் என்ற வாத்தியமும் ஆகிய இவற்றை இசைக்கும் இசைப்புலவர்களும் ஒன்றுசேர்ந்து கடவுள்வாழ்த்து இசைக்கின்றனர் என்று ஐந்தாம் பத்தில் பரணர் கூறுகிறார்.

இன்னும், யாழ் நரம்பைப்பற்றிக் கூறும்போது, கின்னரம் என்னும் பறவை ஒன்றிருந்தது. அதன் சிறகு, காற்றினால் ஓர் இனிய இசையை உண்டாக்கும். அத்தகைய இசையையும் தோல்வியுறச்செய்தது யாழ் நரம்பு என்று கூறப்படுகிறது.

எனவே, பதிற்றுப் பத்தென்னும் எட்டுத்தொகையில் ஒன்றான இந்நூல், புலவர்க்கு அமிழ்தமாகும். வரலாற்றாசிரியர்கட்கு உயரிய கருவியாகும். வீரர்கட்குச் சிறந்த வீரக்களஞ்சியமாகும். மொழிவல்லுநர்க்கு ஆராய்ச்சித் தொகுப்பாகும். கலைஞர்களுக்குக் கலைக்கோயிலாகும்.

வரவேற்பு வாழ்த்திதழ்

[திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகச் சார்பில் அமைந்துள்ள சிவஞானமுனிவர் நூல் நிலையத்துக்கு 19—1—1951-ல் வந்தருளிய சென்னைச் சட்டசபைத் தலைவர் மாட்சிமிகு, ஜே. சிவசண்முகம் பிள்ளை, எம். ஏ., அவர்கட்கு வழங்கப்பட்டது.]

தமிழ்நாட்டின் தமிழ்ப்பெருந் தலைவரே!

வருக! வருக! தங்கள் அன்புவரவால் எங்கள் நெல்லை நாடு எல்லையற்ற இன்பமடைகின்றது. அருள்நலங் கனிந்த தங்கள் அரிய வருகையால் எங்கும் அன்பே கனிந்திலங்குவதாக! கைம்மாறு வேண்டாக் கடப்பாடுடைய தங்கள் கருணைப் பெருமிதங் கண்டு கழிபேருவகை யடைகின்றோம். கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்பமொழியும் தங்கள் நாநலம் கண்டு தமிழ்நாடே வியந்து மகிழ்கின்றது.

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளரே!

நாட்டுத் திருப்பணியே நல்ல தெய்வப் பெரும்பணியென இடையறாது உழைக்கும் தங்களைப் பாராட்டுகின்றோம்.

> "குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
> மடிதற்றுத் தான்முந் துறும்."

என்பது நம் தமிழ்மறை. குலநலம் பேணிக் குறையுடையாரை யெல்லாம் நிறைவுடையச் செய்யும் தங்கள் சிறந்த பணிக்கு, இறைவன் இன்னருள் இனிது முன்னிற்கும்.

தமிழும் சமயமும் தகவுறப்பேணும் தலைவரே!

1920-வது ஆண்டில் நிறுவப்பெற்ற இச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், தமிழுக்கும் சமயத்துக்கும் அளவற்ற பணியாற்றி வருவதை அனைவரும் அறிவர். இதுகாறும் இலக்கியம், இலக்கணம், சமயம், விஞ்ஞானம் முதலிய பல்வேறு துறைகளில் சிறந்த பேரறிஞர்களால் எழுதப்பெற்ற உயரிய ஐந்நூற்றெழுபத்தைந்து நூல்களை வெளியிட்டுள்ளது. தெய்வப் புலவர் அருளிய நம் தமிழ்மறையாகிய திருக்குறளைக் கைக்குள் ளடங்கும் மிகச் சிறிய அளவிலிருந்து மிகப்பெரிய அளவுவரை பல பதிப்புக்களாகக் கண்ணைக் கவரும் கட்டடத்துடன் வெளியிட்டுத் தமிழர்க்குத் தமிழ்நூல்களைப் படிக்கும் ஆர்வத்தைப் பெருக்கியுள்ளது. "நம் கழகத் தமிழ்நூல்களின் அழகிய பதிப்புக்களைப் போல், இந்திய மொழிகளில் எந்த மொழியிலும் எந்தப் பதிப்பாளராலும் இதுகாறும் நூல்கள் வெளியிடப்

பெறவில்லை" என மேன்மை தங்கிய இந்திய மந்திரி உயர் திரு. இராசகோபாலாச்சாரியார் அவர்களைப் போன்ற பெருமக்கள் பலர் பெரிதும் பாராட்டுகின்றனர்.

இக் கழக வாயிலாக வெளிவரும் "செந்தமிழ்ச் செல்வி" யென்னும் திங்களிதழ், பேரறிவாளர்களின் சீரிய சொல்லோவியங்களால் சிறப்புற வளர்ந்து இருபத்தைந்து ஆண்டுகள் நிரம்பப் பெற்று வெள்ளிவிழா மலரும் அண்மையில் வெளிவரவிருக்கிறது. 1930-வது ஆண்டு முதல் கழகம் வெளியிடும் திருக்குறள் நாட்குறிப்பு நம் நாட்டு நல்லறிஞர் பல்லோராலும் பாராட்டப்பெற்று ஒவ்வொருவர் கையகத்தும் ஒளிர்கின்றது.

நம் கழகத்தைச் சார்ந்த தென்னிந்தியத் தமிழ்ச் சங்கமும், சைவசித்தாந்த சங்கமும் இடையிடையே பல மாநாடுகள் கூட்டியும், சிறப்புக் கூட்டங்கள் அமைத்தும் பல பேரறிஞர்களின் ஆராய்ச்சிப் பேருரைகள் நிகழுமாறு செய்து நாட்டுக்கு அறிவுப் பணியாற்றி வருகின்றது. கழகத்திற்கு வரும் ஊதியத்தின் பெரும்பகுதி, சமயப் பணிக்கும் தமிழ்ப் பணிக்குமே செலவிடப்படுகிறது. ஊதியத்தில் நூறுக்கு ஆறு விழுக்காடே கழகப் பங்காளிகளைச் சாருகின்றது. இத்தகைய பொதுநலப் பணியையே என்றும் போற்றியாற்றிவரும் நம் கழகம் தங்களைப் போன்ற அரசியல் தலைவர்களின் தொடர்பாலும் பேராதரவாலும் இன்னும் பல நற்பணிகளை இனிது புரிய முடியும் என்று உறுதியாக நம்புகிறோம்.

பொதுநலம் பேணும் புனிதரே !

சென்னை அரசியலில் அரிய தலைமைப் பதவி தாங்கும் தங்கள் அன்பு, கழகத்தின்பால் என்றும் கனிந்து பெருகுவதாக! தங்களைப் போன்ற சொல்லில் வல்ல நல்ல தூயாரின் துணையால் கழகம் மேலும் பெரும்பணி புரிந்து அரும்பெறற் சிறப்பினையடையும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம். சமயப்பற்றும் தமிழ்ப்பற்றும் ஒருங்கே தழைத்த உள்ளம் கொண்ட தங்கள் மங்கல வருகையால் கழகமும் நூல் நிலையமும் சிறப்புற்றுப் பெரும்பயன் விளைப்பனவாக ! தங்கள் வாழ்வு பல்வகைச் செல்வமொடு மல்கிச் செழிக்கவும், அம்பலக் கூத்தரின் பேரருள் தங்கட்குப் பெருகவும் அவன் திருவடி மலரை வாழ்த்தி வணங்குகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்
கீழைத் தேர்த் தெரு, திருநெல்வேலி. 19—1—51

கதிரவனும் காலநிலையும்

[சு. குமாரஸ்வாமி ஆச்சாரி, B.O.L., மயிலம்.]

கணிமேதாவியார், காமக்கணி என்பன போன்ற சொற்றொடர்கள் நம் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. இத்தொடர்களிலுள்ள கணி என்னும் சொல் 'கணக்கிட்டு அறிபவன்' என்னும் பொருளில் சோதிடரைக் குறிக்கின்றது. எனவே, இச் சொற்றொடர்கள் 'நந்தமிழ் நாட்டில் சோதிடக் கலையில் வல்லுநர்கள் இருந்தனர்' என்பதை உணர்த்துகின்றன. பல்லி யோர்தலும், விரிச்சி கேட்டலும், புள்நிமித்தம் காண்டலும், எத்தொழிலைச் செய்யவும் நன்னாள் கோடலும் ஆகிய வழக்கங்கள் நம் நாட்டிலிருந்தன என்பதை நம் தமிழ் இலக்கியங்களும் தொல்காப்பியமும் கூறுகின்றன. எனினும், சோதிடம் பார்ப்பதால் பயனில்லை எனக் கூறுவர் சிலர். இலக்கண இலக்கியங் கற்றோர் அதற்குச் சான்றாகப் புறப்பொருள் துறைகளுள் "பிள்ளைப் பெயர்ச்சி" என ஓர் துறை யிருப்பதனைக் காட்டுவர். அத்துறை நிமித்தம் பார்க்காமலே செயலாற்றினன் என்பதைத்தான் குறிக்குமே யன்றி நிமித்தம் பார்ப்பது பயனற்றதென உணர்த்தவில்லை. சோதிடக் கலையினைச் சரிவரக் கற்காத குறையினாற்றான் மக்களிடம் இத்தகைய எண்ணம் தோன்றியது, தோன்றுகிறது. சோதிடக்கலை நமக்கு இன்றியமையாததொன்று என்பதை நாம் ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

முக்கால நிகழ்ச்சிகளையும் நமக்கு உணர்த்தும் கருவிகளாக வுள்ளன கோள்கள். அக்கோள்களுள்ளும் தலைமை பெற்றிருப்பது ஞாயிறாகும். அஞ்ஞாயிறு எல்லா வுலகத்தவராலும் எல்லா மதத்தவராலும் போற்றப்படுகிறது. வேனிற் காலத்தில் வருத்தமூட்டும் கதிரவன் மாரிக் காலத்தில் சில நாட்களுக்கு நமக்குப் புலப்படாதிருப்பின், அக்கதிரவனைக் காணாது கலங்குகின்றோமன்றோ! காரணம் இவ்வுலகிலுள்ள உயிர்கள் உயிரல்லாதவைகள் ஆகிய பொருள்கள் எல்லாவற்றையும் ஆக்கி, அளித்து, அழிக்கும் ஆற்றலுடையதாக இருத்தலே யாம். கதிரவனுக்கு இம் முத்தன்மைகளும் உண்டு என்பதை நம் முன்னோர்களும் உணர்வர். "பாடின்றிப் பசந்தகண்" என்று தொடங்கும் (கசு) பாலைக்கலியின் தாழிசைகளில் முறையே "இன்னிசை யெழிலியை இரப்பவும் இயைவதோ" "கனை கதிர்க் கனலியைக் காமுறல் இயைவதோ," "வளிதரும் செல்

வனை வாழ்த்தவும் இயைவதோ,'' எனவரும் தொடர்களில் குறிக்கப்படும் எழிலி, கனலி, வளிதரும் செல்வன் ஆகிய மூன்றும் ஞாயிறு ஒன்றையே குறிப்பனவன்றோ? முத்தொழிசைகளும் ஒரு பொருளினையே குறித்து வரவேண்டுமென்பது இலக்கணமாதலின். இத்தகைய கதிரவனது நிலை, உரு முதலியவற்றைப் பற்றிப் பல பேரறிஞர்கள் நூல்கள் வாயிலாகவும் பத்திரிகைகள் வாயிலாகவும் வெளியிட்டிருக்கின்றனர். அவர்களுள், பண்டைய சிறந்த அறிஞர்களுள் ஒருவரான வராகமிகிரர் தாம் எழுதிய பிருகத்சம்ஹிதையில் கதிரவனைப்பற்றிக் கூறியிருப்பதையே ஈண்டு வரைகின்றனன்.

கதிரவன் மகரத்தை யடையுமுன் வடதிசையை நோக்கிச் செல்லத் தொடங்கினால், நாட்டின் மேற்கு தெற்குப் பகுதிகளில் துன்பமுண்டாம். கடகராசியை யடையுமுன் தெற்கு நோக்கிச் செல்லத் தொடங்கினால், நாட்டின் கிழக்கு வடக்குப் பகுதிகளில் துன்பமுண்டாம். கதிரவன் தெற்கு நோக்கிச் செல்கையில் தன் நிலையில் மாறுபடாதிருப்பின், நாடு வளமடையும்; உணவுப் பொருள் உற்பத்தியாம்; கதிரவனது உருவத் தோற்றத்திலாவது செல்லும் கதியிலாவது மாறுபாடிருப்பின் மக்களுக்கு அச்சமுண்டாம்.

அமாவாசை யொழிந்த ஏனைய நாட்களிலும் த்வஷ்டா என்னும் கேதுவினால் சூரியக்கிரகணமுண்டாம். அப்போது மன்னரும் மக்களும் போரினாலாவது நெருப்பினாலாவது பஞ்சத்தினாலாவது மடிவர்.

தாமசன் கீலகன் முதலிய முப்பத்துமூன்று கேதுக்கள் உண்டு. இக் கேதுக்கள் கருமை நிறமுடையவை. இவைகளின் நிறம், வடிவம், இருக்குமிடம் ஆகியவைகளுக்கு ஏற்றபடி நாட்டிற்குத் துன்பமுண்டாம். இந்தக் கரும்புள்ளிகள் சூரிய கோளத்தில் காணப்படின் மக்களுக்குத் துன்பம் அதிகரிக்கும்; சந்திரகோளத்தில் காணப்படின் மக்களுக்கு மகிழ்ச்சியுண்டாம். இக் கரும்புள்ளிகள் காக்கைபோலவும் போர்க் கருவிகளைப் போலவும் தலையற்ற மனிதவுடல் போலவும் சந்திரகோளத்தில் காணப்படினும் மக்கள் துன்பத்திற்காளாவர். சூரியனில் இப் புள்ளிகள் காணப்படின், நாட்டில் நீர் அரிதாம்; வான வெளியில் தூசு நிறைந்து காணப்படின், காற்று மரங்களையும் முறித்துத் தள்ளும்; மலைகளும் சரியும்படி வீசும்; கற்களையும் மணலையும் வாரி வீசும்; தாவரங்கள் தமக்குரிய பருவகாலத்திலும் பயனளிக்கமாட்டா; பறவைகளும் விலங்குகளும் வெப்பம் தாங்காமல் வருந்தும்; எங்கு நோக்கினும் நெருப்பு நிறைந்திருப்பது போலத் தோன்றும்; மின்னலும் பூகம்பமும் மக்களை வருத்தும்.

இம் முப்பத்துமூன்று கேதுக்களைத் தவிர வேறு கேதுக்கள் சூரிய கோளத்தில் காணப்படின், சூரியக் கிரகணத்துக் குரிய பலனுண்டாம்.

நாட்டில் எப்பகுதியில் சூரியனில் கரும்புள்ளிகள் காணப் படுகின்றனவோ அப்பகுதியில் பஞ்சம் அதிகமாம்; அதனுல் அரசர்கள் வருந்துவர்; உணவில்லாததால் மக்கள் சதையில்லாத எலும்புக் கூடாக விளங்குவர்; முனிவர்களும் தங்கள் நெறியை விட்டுவிடுவார்கள்; மக்கள் தசைப்பற்றில்லாத குழந்தைகளோடு வேறிடம் நாடிச் செல்வர்; நல்லோருடைய செல்வம் திருடர்க ளால் கொள்ளப்படும்; அதனுல் மெலிந்த உடலோடு நல்லோர் கண்ணீரும் கம்பலையுமாயிருப்பர். மக்கள் பஞ்சத்தினுல் வெறுப் புற்று, தங்கள் அரசர்களின் குணத்தையும் பெருமையையும் குறைவுபடக் கூறுவார்கள்; மேகம் நீர் நிறைந்ததாகக் காணப் படினும் மழை பொழியாது; நீர் நிலைகளெல்லாம் வறண்டு போம்; உணவுப் பொருள் இங்கும் அங்குமாகச் சிற்சில இடங் களில் பயிராம்.

அறிஞர் ஜே. நார்மன் லாக்கியர் (J. Norman Lockeyer) என்பாரும் தாம் எழுதிய 'சூரியப் புள்ளிகளும் பஞ்சமும்' (Sun spots and famines) என்னும் நூலில் இக் கருத்தினையே கூறியிருக்கின்றார். அஃதாவது:—"Our Meteorology by falling at different times upon different points of the aerial and aqucous envelopes of our planet, thereby producing ocean and aircurrents; while by acting upon the various forms of water which exist in those envelopes, it is the fruitful parent of rain and cloud and mist Nor does it stop here. It affects in a more—mysterions way the electricity in the atmosphere and the magnetism of the globe itself" என்பதேயாம்.

சூரியனில் காணப்படும் கரும்புள்ளிகள்—தடி-போன்றி ருப்பின், அரசன் மரணமாவான்; தலையற்ற மனிதவுடல் போலத் தோன்றின், நாட்டில் நோய் பரவும்; காக்கை போன் றிருப்பின், கள்ளரால் பயமுண்டாம்; ஈட்டியை யொப்பின், பஞ்சமுண்டாம்; வெண்கொற்றக் குடை, கொடி, சாமரம் முத லிய அரச சின்னங்களைப்போன் றிருப்பின், அரசு மாறுபடும், அல்லது அரசியலில் கிளர்ச்சி ஏற்படும்; நெருப்புப்பொறிகள் போலவும் புகை போலவும் இருப்பின், மக்கள் மடிவர்.

'கரும்புள்ளிகள் தோன்றியபொழுது கதிரவனிலிருந்து வெளியாகும் ஆற்றல் இங்குள்ள பொருள்களைத் தாக்குவதனுல்

இவ்வாறு நிகழ்கின்றன' என தேகிஜெவ்ஸ்கி (Prof. A. Tehi jevsky) என்ற ரஷ்ய விஞ்ஞானி கூறுகிறார்.

கதிரவனில் ஒரு புள்ளியிருப்பின், பஞ்சமுண்டாம்; பல புள்ளிகள் இருப்பின், அரசன் மடிவன். அப்புள்ளிகள் வெண்மை, சிவப்பு, மஞ்சள், கருப்பு நிறங்களையுடையனவாகக் காணப்படின், முறையே பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் துன்புறுவர். சூரிய கோளத்தில் எப்பகுதியில் இப்புள்ளிகள் உண்டாகின்றனவோ அதற்குச் சரியான பகுதியில், இவ்வுலகில் இத்தகைய பலன்கள் நிகழும்.

கதிரவன் நிறம் செம்புபோலக் காணப்படின், சேனாதிபதி மடிவன்; பச்சையாகவோ மஞ்சளாகவோ காணப்படின், அரசகுமாரன் மடிவன்; வெண்மையாகக் காணப்படின், இராஜகுரு மடிவார்; புகைபோலக் காணப்படினும், பல்வகைநிறக் கலப்பாகக் காணப்படினும் விரைவில் நன்மழை பொழியவேண்டும், அல்லது மக்கள் திருடர்களால் துன்புறுவர்.

சித்திரை வைகாசி மாதங்களில் (வசந்த ருதுவில்) கதிரவன் மயிற்பீலி (blue crimson) நிறத்தோடும், ஆனி ஆடி மாதங்களில் (கிரீஷ்ம ருதுவில்) வெண்மையாகவும், பொன் நிறமாகவும், ஆவணி புரட்டாசியில் (வர்ஷ ருதுவில்) வெண்மையாகவும், ஐப்பசி கார்த்திகையில் (சரத் ருதுவில்) தாமரை மலரிதழின் இடைப்பகுதியில் காணப்படும் நிறம்போலவும், மார்கழி தை மாதங்களில் (ஹேமந்த ருதுவில்) குருதிபோலவும், மாசி பங்குனி மாதங்களில் (சிசிர ருதுவில்) செம்பின் நிறம் போலவும், கருஞ் சிவப்பாகக் காணப்படின், மக்கள் மகிழ்ச்சியோடு வாழ்வர். ஆவணி புரட்டாசியில் மேற்குறித்த எவ்வகை நிறத்தோடு காணப்படினும் சூரிய கிரணங்கள் மென்மையுடையனவாக இருப்பின், மக்களுக்கு மகிழ்ச்சியுண்டாம். அம் மாதங்களில் கிரணங்கள் சுரீலெனத் தாக்கும் வெப்பமுடையனவாக இருக்க, கதிரவன் வெண்மை, குருதி, மஞ்சள், கருப்பு நிறங்களோடு காணப்படின், முறையே பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் துன்புறுவர். ஆனி ஆடி மாதங்களில் கதிரவன் குருதி நிறத்தோடு காணப்படின், மக்களுக்குப் பலவகையான அச்சமுண்டாம். ஆவணி புரட்டாசியில் கருநிறத்தோடு காணப்படின், உலகில் நீரில்லாது பஞ்சமுண்டாம். மார்கழி தை மாதங்களில் மஞ்சள் நிறமாகக் காணப்படின், நாட்டில் பலவகையான நோய்களுண்டாம்.

சூரிய கோளத்தில் வானவில் குறுக்கிட்டால் மன்னர்களுக்குள் போருண்டாம். [வானவில் (Rainbow) நீர்த்தாரை

யாக இருக்கலாமோ என ஐயம்] மழைக்காலத்தில் சூரிய கோளம் தூய்மையாகக் காணப்படின், மழையுண்டாம்; ஆவணி புரட்டாசியில் சூரியன் கிரிஷப்பூவின் (Mimosaflexuosa) நிறத்தோடு காணப்படினும் மழையுண்டாம்; மயிற்பீலியின் நிறத்தோடு காணப்படின், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மழையில்லை. சாம்பல் நிறமாயின், மன்னரால் மக்கள் துன்புறுவர். கதிரவன் கருப்பாகக் காணப்படின், பாம்புகளாலும் கிருமிகளாலும் அச்சமுண்டாம்.

சூரியன் தோற்றம், மறைவு காலங்களைத்தவிர மற்றைய நேரங்களில் முயலின் குருதிபோலக் காணப்படின், நாட்டில் போர் மூளும். சூரியன் சந்திரனைப்போலக் காணப்படின், மன்னன் கொல்லப்படுவான்; வேற்றுநாட்டு மன்னன் அரசாளத் தொடங்குவான்.

சூரியன் குடம்போலக் காணப்படின், மக்கள் பசியால் மடிவர். சூரிய கோளம் சிதைவுபட்டதுபோலக் காணப்படின், மன்னன் மடிவான்; கிரணங்களின்றிக் காணப்படின் மக்களுக்கு அச்சம் அதிகமாம்; வாயில் (Gate) போலக் காணின், நாட்டின் தலைநகரம் அழியும்; குடைபோலக் காணப்படின், நாடு அழியும்; துவஜம் (விருதுக் கொடி) போலவும் வில்போலவும் அம்புபோலவும் காணப்படினும் வெயில் வெப்ப மிகுதியோடிருப்பினும் போர் மூளும்.

கதிரவனில் கருப்புக்கோடுகள் காணப்படின், மன்னன் மந்திரியால் கொல்லப்படுவான். தோற்றக்காலத்தில் கதிரவனில் குறுக்காக ஆகாசக்கல் (aerolite), இடி, மின்னல் தோன்றின், மன்னன் மடிவான்; வேற்று மன்னன் அரசாள்வான். தோற்றம், மறைவு காலங்களில் பல நாட்கள் கதிரவனைப் பரிவேடம் சூழினும் கதிரவன் குருதி நிறத்தோடு காணப்படினும் மன்னன் அரசை இழப்பான். தோற்றம் மறைவுகாலங்களில் கதிரவனை மறைக்கும் மேகங்கள் போர்க் கருவிகளின் வடிவத்தோடு காணப்படின், நாட்டில் போருண்டாம்; அவை மான், எருமை, கழுதை, ஒட்டகம், பறவை போலக் காணப்படின், மக்கள் மிகுந்த அச்சமுடையவராவர்.

பரிவேடம் கதிரவனுக்கு வடக்கே காணப்படின், மழையுண்டாம்; தெற்கே காணப்படின், காற்று மிகுதி; தெற்கு வடக்காகிய இரண்டு திசைகளிலும் காணப்படின், வெள்ளமுண்டாம்; மேற்கே காணப்படின், அரசன் மடிவான்; கிழக்கே காணப்படின், மக்கள் மடிவர்.

கதிரவன் நடுவானத்திலிருக்கும்போது குருதி நிறத்தோடு காணப்படினும், மண் காற்றால் மறைக்கப்பட்டுச் சிவப்பாகக் காணப்படினும், அந்தி நேரத்தில் பறவைகளும் விலங்குகளும் அச்சத்தோடு கூக்குரலிடுமாயினும் மக்கள் மடிவர். கதிரவன் இயல்பான வடிவிலும் நிறத்திலும் மாறுபாடில்லாதிருக்க, கிரணங்கள் தூய்மையோடு நெடுந்தொலைவிற்குச் செல்லும் ஆற்றலுடையனவாக இருப்பினும், சூரியகோளத்தில் வேறொன்றும் இடையிடாதிருப்பினும் மக்கள் மகிழ்ச்சியோடு வாழ்வர்.

இவற்றினை மக்கள் அறியவேண்டியது இன்றியமையாததொன்றன்றோ? இத்தகைய பல பொருள்கள் பிருகத்சம்ஹிதையில் காணக்கிடக்கின்றன. அறிஞர்கள் அவற்றினைப் பலரும் அறியச்செய்வார்களாக.

குடியரசுத் திருநாள்*

[செல்லூர்க்கிழார், செ. ரெ. இராமசாமி பிள்ளை.]

படியரசு காலையெழூஉ துலகமெலாம் ஒளிபரப்பும் பண்பார் நாளின்
முடியரசாம் இருட்கணங்கள் மூலைகளில் புக்கொடுங்கி முடங்கி நிற்கக்
கடியரசாம் போரின்வெறி கால்முறிந்து நடுங்கிவிழக்; காலம் பார்த்த
'குடியரசு' மலர்ந்திடுக; நன்மையெலாம் ஓங்குகவே குலவிப் பார்மேல். (௧)

மக்களெலாம் உயிர்களெலாம் இன்பநிலை வளம்பெறுக; மகிழ்ச்சி யோங்கத்
திக்கெல்லாம் மழைபொழிக; செஞ்சாலி நெல்விளைக; தெருக்கள் தோறும்
மிக்குயரும் கலையோங்க; நிலையோங்க; நலமோங்க; வீறிட் டென்றும்
தக்கநெறி தழைத்தோங்க; குடியரசு மலருமிந்தத் தனிநாள் தன்னில். (௨)

சோற்றுவளம்; இன்பவளம்; துன்பநிலை அறியாத தூய உள்ளம் [பூத்த
ஏற்றவளம்; இறைவன்வளம்; ஏந்திழையார் பெண்ணணங்கார் இன்பிற்
மாற்றமிலா மக்கள்வளம்; செல்வவளம்; ஆயுள்வளம்; வண்மை சான்ற
ஏற்றவளம் எல்லாமும் குடியரசுத் திருநாளில் இணைக நன்றே. (௩)

---

*1950 சனவரி 26-நாள் முதற் 'குடியரசு'த் திருநாளின்போது பாடியன.

சிவமுருகன் தமிழ்

தமிழ் நெடுங்கணக்கு - பெயரும் எண்ணும்

[இராவ்சாகிப், சைவப்புலவர்,
டாக்டர், தி. இரா. அண்ணாமலைப்பிள்ளை,
L.C.P.S., L.M.S.S.A. Lond.]

(செந்தமிழ்ச்செல்வி—சிலம்பு உ௫ - பரல் ௫ - ப. உ௩௭ தொடர்ச்சி)

முப்பத்துமூன்று தனிப்பெருஞ் சிறப்புவாய்ந்த எண்

திருவள்ளுவரும், திரு. மில்ட்டனாரும் (Poet Milton). முப்பத்துமூன்றும்

வான்புகழ் கொண்ட தமிழ்நாட்டில், திருவள்ளுவ நாயனார், எல்லாம் வல்ல இறைவனுக்கு நூறு குறட் பதிகங்களும், அம் முதல்வனது பல தோற்றங்களாகக் கருதப்படும் முப்பத்து மூன்று தேவர்களுக்கும் முப்பத்துமூன்று குறட் பதிகங்களு மாக வமைத்துத் தம்மையும் அம் மெய்ப்பொருளுக் கடிமை யாக்கி, தமது அழியாவுடைமையையும் உலகினுக்கொப்ப டைத்த அருட்செயலை மறந்து உலகமுந் தமிழ்நாடும் உயிர் வாழ முடியுமோ ?

சமயத் துறையில், ஊன்றி யுழைத்துக் கண்ணிழந்தும் கையிழக்காத மேனாட்டுப் பெரும்புலவர் திரு. மில்ட்டனார் (Milton) பாடியருளிய பொருள்கள் ஒரு நூறேயாகும். பேரின்ப வீட்டைத் துறப்பதும் (Paradise Lost), அதை மீள அடைவதும் (Paradise Regained) பற்றி, தமக்கு உண்ணின் றுணர்த்தியபடி நல்லிசைப்படுத்தி உலகுக்கு வழங்கினார். அவர் பாடிய நூறு பொருள்களும் (Scriptural and British) என் னும் இரண்டு பிரிவில் அடங்கும். பின்னையது முப்பத்துமூன் றேயாகும்; அவை குறுகிய அளவிற் பாடப்பட்டவை, தெய்வத் தன்மை (Sacredness) நிரம்பிய பாக்களென்று உரையாசிரியர் கூறுவர். ஆகவே, திரு. மில்ட்டனார் முப்பத்துமூன்றை நூற் றில் அடக்கினார். வள்ளுவப் பெருந்தகை, நூற்றுக்குமேல் முப்பத்துமூன்றும் விதந்தோதினார். முப்பத்துமூன்று என்னும் எண் தூய்மை வாய்ந்ததென்பதுதான் இங்குக் காணவேண்டிய குறிப்பு. திருக்குறள், உலக முழுவதும் ஒளிபரப்பும் சமயப் பாதுநூலாகக் கருதப்படுவதால், திருவள்ளுவரது திருவடி யைத் தலைமேற் கோலிச் செல்வோமாக,

நக்கீரரும் முப்பத்துமூவரும்

'உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர் அலைவாய்' முருகனடிகளாராகிய நக்கீரதேவநாயனார், திருமுருகாற்றுப்படையில், 'திருவாவினன்குடியில் அசைதலுமுரிய' முருகன் திருக்காட்சியை விளக்குகின்றார். முருகப்பிரானின் மெய்யடியார்கள் பெருந்திரளாய்ச் செல்லுகிறார்கள். தவமுனிவர், இசைவாணர் (யாழ்ப்பாணர்) - கந்தருவர், திருமால், முக்கண்ணன், இந்திரன் முதலிய முப்பத்துமூன்று தேவர்கள் எல்லோரும் நான்முகனைப் (பிரமன்) பழைய நிலையிலே நிறுத்துவிக்கக் கருதியும், தத்தங் குறை யிரத்தற்பொருட்டும், வான்வழியாய் விரைவில் வந்து தன்னைக் காணும்படி, முருகன் திருவாவினன்குடியில் எழுந்தருளியிருக்கின்றான். இங்ஙனம் நக்கீரர் முருகனைக் காணும் பொழுது,

> " பகலில் தோன்றும் இகல்இல் காட்சி
> நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரொடு"—(11 × 3=33)
> —திருமுரு. ௧௬௬ - ௭.

என்று முப்பத்துமூவரைக் குறிக்கின்றார். இம் முப்பத்துமூவருக்குள், அறிவில் வேறுபாடு கிடையாது; ஆயினும் **ஒருபொருள் பலவாமாறுபோல**, பகுத்துக் காணுங்கால் நால்வகை இயல்பினையுடையவர்கள் என்பது இதன்பொருள். இப் பதினொரு மூவர் (முப்பத்துமூவர்) யார்? இவர்களே, **ஆதித்தர் பன்னிருவர்** (துவாதசாதித்தர்), **உருத்திரர்பதினொருவர்** (ஏகாதசருத்திரர்), **வசுக்கள் எண்மர்** (வசு-அக்கினி), **மருத்துவர் இருவர்**, (அச்சுவினி) ஆக முப்பத்துமூவர் என்று கூறுவர். இவர்களை வேறு பெயர் கொண் டழைப்பதுமுண்டு. இங்ஙனம் பாகுபடுத்தியதன் தன்மையை முன்னர் ஆராய்வாம். இங்கு நக்கீரர், முப்பத்துமூவருக்கும் பெருஞ் சிறப்பளித்துள்ளார் என்பது வெள்ளிடைமலை.

பரிபாடலும் முப்பத்துமூவரும்

இந்நூல் கடைச்சங்கம், எட்டுத்தொகையுள் ஒன்று (ஐந்தாவது) என்பதை யாமறிவோம். இப்பாடல், தேவாரத்தைப் போல, அக்காலத்திலேயே பண்களிற் பாடப்பெற்றுவந்தன வென்பதும், 'இசைப்பா வகையில் யாக்கப்பட்டு, பண் அமைக்கப்பட்ட பாடல்களுள் காலத்தால் முந்தியது' என்பதும் பேறிஞர் கூற்று. ஒவ்வொரு செய்யுளின்பின், பண்ணின் பெயரும் இசைவகுத்தோர் பெயரும் எழுதப்பட்டுள்ளதும் வெளிப்படை. பரிபாடல், பரிபாட்டென்றழைக்கப்படுவதோடு, நான்கு பாவாலும் பரிந்துவருவதால் அப்பெயர் பெற்றதென்றும், இழைபு என்னும் வனப்புடையதென்றும் கூறுவர். பரி

பாடலின் அமைப்பும் அதன் பெருமையும் சமயம் வந்துழி விரித்துரைப்பாம்.

இந்நூலில், '..........................விதியின் மக்களும், மாசில் எண்மரும் பதினொரு கபிலரும், தாமா இருவரும்' என்னும் வரிகளைக் காண்கின்றோம்.

—பரிபாடல். ௩ - ௬ - ௮.

ஆதித்தா பன்னிருவர்; மாசில் எண்மர் - எட்டு வசுக்கள்; பதினொரு கபிலர் - செய்யர், செந்நிறத்தவர் - பதினொருவர்; தாமா இருவர்: தாமா - தாவுமா - குதிரை - அசுவம் (அச்சுவினி தேவர்) இருவர், ஆக மொத்தம் 33. ∴ பரிபாடலிலும் முப்பத்து மூன்று என்னும் தொகைக்குச் சிறப்பு வழங்கப்பட்டுள்ள தென்று கூறுவதுமிகையாகாது.

திருவாசகமும் முப்பத்துமூவரும்

மணிவாசகப்பெருமானார் அருளிய திருவெண்பாவில்,

"மூவரும் முப்பத்து மூவரும் மற்றொழிந்த
தேவருங் காணாச் சிவபெருமான்" —திருவா - திருவெண்பா, ௧.

என்னும் மணிவார்த்தைகள், "ஒருவ னென்னும் ஒருவன் காண்க" என்னுங் கருத்தை வலியுறுத்துகின்றன. இதை யுற்று நோக்கும்போது, இவ் அடிகளார் மனத்திலும், 'சிவபெருமானை யடுத்து, மூவரும் முப்பத்துமூவருமே சிறப்புக்குரியவரென்பது' உள்கிக்கற்பாலது. மூவர் தனியடியார் போலவும், முப்பத்து மூவர் தொகையடியார் போலவும் வைத்தெண்ணப்படுவரோ? மும்மூர்த்திகளுக்கும் முப்பத்துமூவருக்கும் உள்ள தொடர்பை ஆராய்தல் வேண்டும்.

திருநாவுக்கரசரும் முப்பத்துமூவரும்

"என்கடன் பணிசெய்து கிடப்பதே," "புண்ணியா, உன் னடிக்கே போதுகின்றேன்" என்னும் தம் திருமொழி இலக்கியமாய் விளங்கும், எங்கள் அப்பரடிகள், உலகின் மருள்நீங்க, உழவாரப் படைதாங்கிப் பாடியருளிய சித்தத்தொகை—திருக்குறுந்தொகையில், முதற்பாட்டின் முதல் வரியை, "சிந்திப்பார் மனத்தான் சிவன் செஞ்சுடர்" என்று சிகரத்திற் றொடங்கினார். இதையடுத்துத் தொடரும் ஒவ்வொரு பாவின் முதல் எழுத்துக்களையும் உற்றுநோக்கும்பொழுது அவை, அகரத்திலிருந்து ஔகாரம், பின்னர் அஃகேனம் (ஆய்தம்), ககரத்திற் றொடங்கிய பதினேழு மெய்களுமாய் முற்படுகின்றன. நகரத்தையும் ஙகரத்தையும் ஒரே பாவில் அமைத்துள்ளார். ஆகவே,

முப்பத்துமூன்று எழுத்துக்களும் இப் பாக்களுக்கு முதன்மை யாய் நின்றன. இம்முப்பத்துமூன்றெழுத்துக்களுக்கும் முதலில் நிற்பது "சி" (சிவ்வெழுத்து), என்னும் பேரழகு வாய்ந்து, ஆழ்ந்த கருத்தைச் சுட்டிக்காட்டுந் தனிச் சிறப்பை என்னென்று கூறுவாம்! இதினின்றும், முப்பத்துமூவர்க்கும் மிக்கோனாய் நிற்ப வன் ஒருவனே யென்பது திருநாவுக்கரசடிகளாரின் திருவாக்கு என்பதை ஓயாது சிந்தித்தல் வேண்டும்.

கந்தபுராணமும் முப்பத்துமுக்கோடி தேவரும்

இனிக் கந்தபுராணத்தில், கச்சியப்ப முனிவரருளிய தேன் சுவைக்கும் திருப்பாடலைப் பருகுவாம். அண்டகோசப் பட லத்தில், 'இரவிபதந் தரணிக்கோரிலக்கமாகுமங்கதனின் முப்பான் முக்கோடி தேவரருக்கனுடன் வழிக்கொள்வர்' என்று, சூரிய மண்டலத்தில் முப்பத்துமுக்கோடி தேவர்களும் உறைவதாகக் கூறப்பட்டுள்ளது. இதற்குமேல் சந்திரலோகமுள்ளதாம். இன்று மனிதன் சந்திரலோகத்தையடைய முயற்சிக்கின்றான்; மூவேழுலகத்துக்குஞ் செல்லும் ஆற்றல் பெறினும், முப்பத்து மூவருக்கும் முதல்வனாய் நிற்கும் மூத்த திருவடிகளை புறக் கண்களால் காணமாட்டான். இது நிற்க. உருத்திரர் கேள் விப் படலத்திலும், உருத்திரர் பதினொருவரென்றும், அவர்கள் 'பரமனதுருவாய் நின்றோர் பதினொருவோர்' என்றும், "அறு வர் ஐவர் உருத்திரகணத்தோர்" (6+5=11), என்றும் 'வேதன் நெற்றித்தலத்தினும் போந்து நின்றார்' - பிரம்மாவின் நெற்றியினின்றும் உருத்திரர்கள் சிவபெருமான் அருளினால் வெளிப்பட்டார்களென்றுங் காண்கிறோம். முப்பான்முக் கோடி தேவர், முப்பத்துமூவரே யென்பது முன்னரே விளக்கப் பட்டது.

திருவிளையாடற்புராணமும், முப்பத்துமூவரும்

இங்ஙனமே, பரஞ்சோதிமுனிவர் பகர்ந்தருளிய திருவிளை யாடற் புராணமும், பல இடங்களில், முப்பத்துமூவரைப்பற்றிக் கூறும். "பாலம் ஏற்ற செந்தழல் விழி உருத்திரர் பதினொருவர்", 'எண்வசுதேவர்', "மருத்துவர் இருவோர்", "ஆறிரண்டு அருக்கர்" என்று ஆங்காங்குச் சுட்டப்பட்டுள்ளது.

குமரகுருபரரும் முப்பத்துமூவரும்

சிவமுருகன் பெருமையை வடகாசியிலும் நிலைநாட்டிய குமரகுருபர அடிகள், "இருவர் எண்மர் பதினொருவர் பன் னிருவர்" என்று மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்—காப்புப் பருவத்திலும், "மருத்துவர் வசுக்கதிர் உருத்திரரெனப்பொலியு

முப்பத்துமுக்கோடி தேவர்கள் புரக்கவே" என்று முத்துக் குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்—காப்புப்பருவத்திலும முப்பத்து முக்கோடி தேவருக்கும் தனித் தனியாகத் துதிப்பாக்கள் அமைத்துப் போற்றியுள்ளார்.

அருணகிரிநாதரும் முப்பத்துமூவரும்

இல்லறத்தழுந்தி முருகனருள் பெற்றுத் துறவறம் பூண்ட அருணகிரிநாதரின் அறஉரைகளைக் கூர்ந்து நோக்குவோம்.

'முத்தைத்தரு பத்தித்திருநகை' என முருகப்பிரான் அருணகிரிநாதருக்கு அடி எடுத்துக்கொடுத்து மறைந்தருளினாரென்பது வரலாறு. இத்தவமுனி பாடியருளிய திருப்புகழ் வரிசை-ஆயிரத்துக்குமேற்பட்ட பாக்களின் முதல் எழுத்துக்களை அவரடி பணிந்து அலகிடுவோமாக. செந்தமிழ் உயிரெழுத்துக்களில், அகரத்திற்றொடங்கி, ஓங்காரம் வரையிற்சென்று, பின்னர் ககர வரிசையிற் றொடங்கி வகரத்தில் முடிப்பது எத்தனை தெய்வத்தன்மை வாய்ந்தது! மொழிக்கு முதலில் வாரா மெய்யெழுத்துக்களாகிய டகர, ணகரங்கள், ரகர லகர ழகரங்கள் முதலியனவற்றிற் பாட்டுக்கள் உயிரெழுத்துச் சேராமற்றொடங்குவதேயில்லை. ககர வரிசையிலுள்ள பாக்களை நுழைந்து பார்ப்பவர்கள் ககரத்தின் பின்னரும் தமிழ் நெடுங்கணக்கின் வரிசையிலேயேதான் மெய்கள் சேர்க்கப்பட்டிருக்கும். (உ-ம்.) அ, ஆ........ஓ, (பின்னர்) கக, கங், கச், கட், கண், கத, கந், கப், கம என்ற உள்வரிசை தோன்றும்.

இங்ஙனம், செந்தமிழ் இலக்கண விதி பிறழாது உதிக்கும் இப்பாக்கள் வரிசை எம்போலிகளுக்கு ஒரு வாக்களிக்கின்றது. வருங்காலத்தில், தமிழ் நெடுங்கணக்கு வரிசைக்கோ அல்லது இலக்கண விதிகளுக்கோ மாறுதல் ஏற்படினும், இவ் அழியாத் திருப்புகழ் தமிழ் நெடுங்கணக்கு முப்பத்துமூன்று எழுத்துக்களின் வரிசை யழியாது நிலைநிறுத்திக் காத்தருளும் மந்திரத் தூணாய் இலங்குகின்றதென்பதே. இவ்அடிகளார் காட்டியருளிய வரிசையை PERMUTATION and COMBINATION என்று கூறுவதா? அல்லது PROGRESSION என்று சொல்வதா? இவ் வரிசையைக் கண்ணுறுவார்க்கு அது ஒரு புதிய இன்பந்தரும்—ALPHABETICAL PROGRESSION, என்று புதுப் பெயர் கொடுத்தழைக்கலாமா?

ஸ்ரீ ஆழ்வாரடிகளும் முப்பத்து மூவரும்

எம் அன்னைப்பிராட்டியார் திரு ஆண்டாள்நாச்சியார் பெருமாட்டி ஒப்பற்ற அற்புத நோன்பு வளர்த்து அருள் பெற்ற

திருமதி உலகத்தாயல்லவா! திரு அம்மையார் பாடியருளிய திருப்பாவையினின்றே இத்தெய்வக் கோதைநாயகியார் திருப் பெரியாழ்வாரின் திருமகளாரென்பது நன்கு விளங்கும்.

“ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ வுலகினிற் பெய்திடாய்” —ஆண்டாள், திருப்பாவை-௪

என்னுமன்பின் கட்டளையைக் கடவுளும் மீறமுடியுமா? ‘எங்கை உனக்கல்லாதெப்பணியுஞ் செய்யற்க’ என்னுங் கூற்றை நினைப் பூட்டுகின்றதல்லவா?

இத் திருப்பாவையில் ஒரு பாட்டு,

“முப்பத்துமூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பந் தவிர்க்கும் கலியே துயிலெழாய்”
—ஆண்டாள், திருப்பாவை-உ௰

என்று தொடங்குகின்றது. இன்னும் - திருநம்மாழ்வாரும் முப்பத்து மூன்று திவ்விய தேசப் பெருமாள்களைப் பாடியுள்ளார்: அவர்களின் முப்பத்து மூன்று திருவுருவங்களும் திருக்குருகூரிலே (ஆழ்வார் திருநகரி) திருப்புளியைச்சுற்றி எடுத்திருக்கும் கற்சுவர்களிற் பொறிக்கப்பட்டுள்ளனவென்று அவ்வூர், ஸ்ரீ ஆதிநாதர் ஆழ்வார் கோயில் வரலாறு கூறுகின்றது. (ப-14) இங்ஙனமாயின், முப்பத்து மூன்று ஒரு சிறந்த எண்ணல்லவா!

ஸ்ரீமத் பகவத்கீதை உபநிடதம், மகா பாரதம்

இறுதியாக, இம்மூன்று தெய்வ நூல்களின் வாக்குக்களையுஞ்சேர்த்துக் கூறுவதின் எமது நோக்கமே, இவ்வாக்குகளுக்கு மேல், சான்றுகளில்லையென்பதே. இவை அநாதியாய், உள்ள திருமறை மொழிகளாகும்; கால அளவுக்குள் அமையாத உபதேச மொழிகளும் இவைகளே. திருக்கண்ணபிரானும் அர்ச்சுனனும் கூறும் உறுதிமொழிகள்தானே, மகா பாரதம்! இவைகளை ஒன்றாகத் திரட்டி அநுபவித்தலே சாலத் தகுதியாகும். இங்குக் கூறப்படும் குறிப்பை, (‘Gita Rahasya or Karma Yoga by Bal Gangadhar Tilak, B. A. LL. B. & B. S. Sukthanka, B. A. LL. B. Vol. II) என்னும் நூலினின்று (பக்கம் 1084) பொறுக்கியுள்ளோம். ஆதலின், அதை ஆங்கிலத்திலேயே வரைந்துள்ளோம். “It is stated in the Brahadranyakopanishad that the Eight Vasus, eleven Rudras, twelve Adityas, Indra and Prajapati make in all THIRY THREE GODS—and their names and etymology have been stated in the Maha Bharata, Adi parva, ch. 65 and 66 and Santiparva ch. 208”

ீன் ஸ்ரீமத் பகவத் கிதை, ஸ்ரீ இராமகிருஷ்ணர் மடம்-(1945) என்னும் நூலில், பக்கம்—212, விளக்கவுரையாக,

தேவர்கள் முப்பத்து மூவர் 1 பிரம்மா: 11 உருத்திரர், 12 ஆதித்யர்; 8 வசுக்கள்; 1 இந்திரன் என்று கூறப்பட்டுள்ளது. ஹரிவம்சம் 1,3·51—உருத்திரர் பதினொருவரென்றும் இவர்களுள் முக்கியமாய்ச் சம்புமூர்த்தியே சங்கரன், மங்கள ரூபி, மங்களங்களை யளிப்பவன் என்றுங் கூறும்.

இன்னும், திவாகரம், பிங்கலம், திருமந்திரம், திருவரங்க மாலை, தக்கயாகப்பரணி, விசார சாகரம், தேவாரம், தாயுமானவர், பட்டினத்தார், சிவஞான சுவாமிகள், இராமலிங்க சுவாமிகள் இவர்களுடைய வாக்குக்களையும், அவைபோன்ற பல நூல்களையும் ஊடுருவிப் பார்ப்பவர்க்கு, முப்பத்து மூன்றைப்பற்றிய வரலாறுகள் கிட்டவே கிட்டும். சமயம் வந்துழி எடுத்துரைப்பாம். முப்பத்து மூன்றைப்பற்றிய விஞ்ஞானச் சான்றுகளை அடுத்த கட்டுரையில் எழுதி முடிக்க இறைவன் திருவருள் புரிவாராக.

தமிழ் மொழி

[கா. கணபதி]

தேனென இனிக்கும் தமிழ்மொழி கல்லார்
செம்மொழி வேறெது கற்பார்
வானமிழ் தொத்த தமிழ்மொழி கேளார்
மற்றும்வே றெம்மொழி கேட்பார்
கோனென விளங்கும் தமிழ்நெறி கொள்ளார்
கூர்நெறி வேறெது கொள்வார்
தாயென எவர்க்கும் தீந்தமிழ் அளிக்கும்
தண்மையார் எம்தமிழ் மொழியே.

கடவுள்

[செல்லூர்க்கிழார், செ. ரெ. இராமசாமி பிள்ளை.]

உலகம் தோன்றி அறிவு நிலை திருந்தியதிலிருந்து கடவுளைப்பற்றிய ஆராய்ச்சியே அறிஞர்களால் ஆராயப்படுகின்றது. அக்கடவுட் கொள்கை பற்றிப் பலப்பல சமயங்கள், பல்வேறுவகை வேறுபாட்டுடன் தோன்றி வளர்ச்சியடைந்துள்ளன. தமக்கு மேம்பட்ட ஆற்றலுள்ள உயிர்ப் பொருளையும் உயிரில்லாத மற்றைய பொருள்களையும் ஒரு காலத்தில் கடவுளாக வைத்து மக்கள் வணங்கி வந்தனர். அதுவே பாம்பு வழிபாடும், தீ வழிபாடும், வில் வேல் வாள் முதலிய படைக்கல வழிபாடுமாகும். அவை இன்னும் நம் நாட்டில் வழிபாடாக இருந்து வருகின்றன. அரச மரத்தினடியில் பற்பல ஐந்தலை நாகப்பாம்புகள் வடிவில் கல்லில் அடித்துவைத்து வழிபடுவதும், தலங்களில் சென்று துன்ப நீக்கத்துக்காக நாகர் உருவங்கள் செய்து வைப்பதுவும் கொண்டு அறியப்படும்.

நாட்டுப்புறங்களிலுள்ள வயல், புன்செய் முதலிய நிலப்பாங்குகளில், வில் வேல் முதலியவற்றைக் குறடுகட்டி ஊன்றிவைத்து வழிபடுவது நாம் கண்கூடாகக் கண்டறிந்ததொன்று. பழங்காலத்தில்கூட சுறுமீன்கொம்பை நட்டுவைத்துக் கடவுள் வழிபாடு செய்ததாகப் பட்டினப்பாலை கூறு

பின் அறிவுநிலை திருந்தி மேம்பட மேம்பட, பொருந்தி எல்லாவற்றினும் கலந்து, அவைகளைப் படைத்தும் காத்தும் அழித்தும் வருகின்ற ஒருவகைச் சக்தி (வலிமை)யே 'கடவுள்' எனத் தெளிந்தனர். அத்தெளிவை இரண்டாயிரம ஆண்டுகட்கு முன்னரே அறிந்து காட்டினர், நம் செந்தமிழ் நாட்டுச் சீரிய கூரிய பேரறிஞர்.

அது: தீயிற் சூடு; பூவினுள் மணம்; கல்லில் மணி; சொல்லினுள் உண்மை; அறத்தில் அன்பு; வீரத்துள் வலிமை; வேதத்துள் மறை பொருள்; ஞாயிற்றில் வெப்பம்; திங்களுள் குளிர்வு; இன்னும் உலகில் காணப்படும் பொருள் ஒவ்வொன்றினும் இரண்டறக் கலந்து நிற்கின்றான் எனவும், ஆதலின் அக்கடவுள் ஒன்றிலிருக்கின்றான், ஒன்றில் இல்லையென்று கூறுதற்கில்லை, அவன் இவைகளை மறவாத வியத்தகு பண்பினன் எனவும், அவன் முதலும் இடையும் கடையுமென்ற முக்காலத்தும் பிறந்தவனுமல்லன்; அவனைப் பிறப்பித்தோருமில்லை. தானே தோன்றிய தனிப்பெரும் தலைவன் எனவும், அவன் வியத்தகு முழுஆற்றலை விரித்துரைத்து, அவர்கள் கண்ட முழு உண்மையை நமக்குத் தெளிவித்தனர். அத்தெளிவின் பிழிவாக, கடுவன் இளவெயினனார் என்னும், நல்லிசைப் புலவர் பெருமான் பாடியுள்ள 'பரிபாடல்' அடிகள் நன்கு விளக்குகின்றன; அவை:—

தீயினுள் தெறல்நீ; பூவினுள் நாற்றம்நீ;
கல்லினுள் மணியும்நீ; சொல்லினுள் வாய்மைநீ;
அறத்தினுள் அன்புநீ; மறத்தினுள் மைந்துநீ;
வேதத்து மறைநீ; பூதத்து முதலும்நீ;
வெஞ்சுடர் ஒளியும்நீ; திங்களுள் அளியும்நீ;
அனைத்துநீ; அனைத்தினுள் பொருளும்நீ; ஆதலின்,
உறைவும் உறைவதும் இலையே; உண்மையும்
மறவியில் சிறப்பின் மாயமா ரனையை;
முதல்முறை இடைமுறை கடைமுறை தொழிலிற்
பிறவாப் பிறப்பிலை; பிறப்பித்தோர் இலையே.

பரிபாடல்: ௩, அடி: ௬௩ - ௭௨.

'பாணர் கைவழி' மதிப்புரை

(மறுப்பு)

[புலவர், ஞா. தேவநேயப் பாவாணர்.]

(உரு-ஆம் சிலம்பு உஙஉ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருஞானசம்பந்தரினும் முதியரான திருநாவுக்கரசர், "மாசில் வீணையும்" என்று பாடியிருத்தலானும்; திருநீலகண்ட யாழ்ப்பாணர் யாழ்முரிப்பண்ணை இசைத்தற்கியலாமை பற்றித் தம் யாழை உடைத்தற் கெழுந்தபோது, அதைத் தடுத்த சம்பந்தர் 'யாழை விட்டுவிட்டு வீணையை மேற்கொள்ளும்' என்னாது, 'திருப்பதிக இசையை இயன்றவரை இயக்கும்' என்றமையானும்; பாணரும் வேறொரு நரப்புக்கருவியை மேற்கொள்ளாமையானும்; அவர் கையாண்டது வீணையொத்த கருவியேயன்றி வேறன்று என்பது துணியப்படும்.

இனி, வீணை எத்துணைச் சிறப்பினதாயினும், அதை இயக்குவோர் எத்துணைத் திறவோராயிருப்பினும், அது எவ்வெவர் மிடற்றிசையையும் இட்டுக் காட்டற்கேற்றது என்பது முற்றும் உண்மையானதன்று. இறைவன் அமைத்த மிடற்றிற்கும் மாந்தன் அமைத்த வீணைக்கும் சிறிதேனும் வேறுபாடு இருக்கத்தான் செய்யும்.

5. "யாழும் வீணையும் வெவ்வேறு கருவிகள்."

ஒரு நரம்புள்ள சுரையாழ முதல ஆயிரம நரம்புள்ள வரை எல்லா நரம்புக்கருவிகட்கும் யாழ் என்பது பொதுப் பெயராகும். எவ்வெவ் வடிவிலிருப்பினும், எவ்வெவ் அமைப்பைக்கொண்டதாயினும், எவ்வெம்முறையில் இசைக்கப்படினும், எவ்வெந் நாட்டிற்குரியதாயினும், நரம்பு அல்லது கம்பிகொண்ட இசைக்கருவிகளெல்லாம் தமிழில் யாழ் என்றே பெயர் பெறுதற்குரியன. கின்னரி அல்லது சிறியாழ், (Fiddle), கித்தார், சுரமண்டலம், மண்டொலின், பேஞ்சோ, புல்புல்தாரா, சுரகெத், சித்தார், கச்சுவா, தாவூஸ், தில்ருபா, ஏஸ்ராஜ், சாரிந்தா (சாரங்கி), வில்லடி, சுரைவீணை, அகப்பைக் கின்னரி, வில்யாழ், தம்புரா (கேள்வி யாழ்), வீணை முதலிய எல்லா நரப்புக் கருவிகளும் பொதுப்பட யாழ் என்றே அழைக்கப்பெறுவன. ஆகவே, யாழ் என்பது ஒரு தனிப்பட்ட கருவியின் சிறப்புப் பெயராகாது. அது தோற்கருவி துளைக்கருவி நரப்புக்கருவி கஞ்சக்கருவி என்னும் நால்வகைக் கருவியுள், நரப்

புக்கருவியை யெல்லாம் பொதுப்படக் குறிக்கும் பொதுப் பெயராகும். இப்பாகுபாட்டின்படி இற்றை வீணையும் இருவகையாழா யிருக்க, அதைமட்டும் எங்ஙனம் வேறு பிரித்துக் கூறமுடியும்?

யாழும் வீணையும் வெவ்வேறு கருவியாயிருப்பின், நாரத யாழ் நாரதவீணை எனச் சிலப்பதிகாரத்தும், மகரயாழ் மகர வீணை எனச் சிந்தாமணியிலும், ஒரே கருவி ஏன் இருபெயரா லும் அழைக்கப்பெறல்வேண்டும்? ஆதி (பெரு), மகர, சகோட, செங்கோட்டு, மூண்டக, சிறு முதலிய அடையடுத்தா லன்றி, யாழ் என்னும் பெயர் ஒரு சிறப்புவகை நரப்புக் கருவி யைக் குறிக்காது. ஆயினும், சுருக்கம்பற்றி, துப்பாக்கியிற் பலவகையிருப்பினும் அவற்றுட் சிறந்ததும் துப்பாக்கியென்றே அழைக்கப்பெறுதல்போல, யாழுட் பலவகையிருப்பினும் அவற்றுட் சிறந்ததும் யாழ் என்றே அழைக்கப்பெறும்.

நரப்புக்கருவி வில்நாணொலியிலிருந்து கண்டுபிடிக்கப்பட் டதாகத் தெரிதலால், வில் யாழே முதன்முதல் தோன்றிய யாழ் வகையாக இருத்தல்வேண்டும். அதன்பின், பத்தர் (குடம்) உள்ள வில்யாழும், பத்தரும் கோடும் (தண்டியும்) உள்ள கோட்டி யாழும், பத்தரும் கோடும் திவவுமுள்ள திவவியாழும், முறையே தோன்றியிருத்தல் வேண்டும். தலைச்சங்கக் காலத்தி லேயே தமிழ் முத்தமிழாய் வழங்கியதால், கடைச்சங்கக் காலத் துச் சிறந்த யாழ் வகைகளாகக் கொள்ளப்பட்ட பேரியாழ் மகரயாழ் சகோடயாழ் செங்கோட்டியாழ் என்னும் நால்வகை திவவியாழாகவே இருந்திருத்தல் வேண்டும். அவை முறையே யாழும் ஒன்றினொன்று ஏதேனுமொரு வகையில் சிறந்ததாயு மிருந்திருத்தல் வேண்டும். அவற்றுள், செங்கோட்டியாழ் கருவி யமைப்பில் இற்றை வீணையை ஒத்ததாகும். நரம்பிற்குப் பதிலாய்க் கம்பியும் வார்த் திவவிற்குப் பதிலாய் வெண்கல மெட்டும் தோற்போர்வைக்குப் பதிலாய் மரப்பலகையும் வறு வாய்க்குப் பதிலாய் நுண்துளைத்தகடும் கொண்டிருத்தலே, இற்றை வீணையின் வேறுபாடாம். குடவடிவிற் சிறிது மாறுதல், கோல் எனப்படும் மெட்டுத்தொகையிற் கூடுதல், ஆகியவற்றை யும் வேறுபாடாகச் சேர்த்துக்கொள்ளலாம். இவையெல்லாம் காலவளர்ச்சியில் வசதிக்கேற்ப ஏற்பட்டவை. ஈராயிரம் ஆண்டுக்கு முற்பட்ட செங்கோட்டியாழ் இன்று இத்துணை வேறுபட்டிருப்பது வியப்பன்று.

“பேரியாழ் பின்னு மகரஞ் சகோடமுடன்
சீர்போலியுஞ் செங்கோடு செப்பினர்—தார்பொலிந்து
மன்னுந் திருமார்ப வண்கூடற் கோமானே
பின்னு முளவே பிற.”

என்பதனல், கடைச்சங்கக்காலத்தில் பலவகை யாழ்கள் இருந்தன என்பதும், அவற்றுள் நான்கு சிறந்தன என்பதும், அவற்றுள்ளும் செங்கோட்டியாழ் தலை சிறந்தது என்பதும், அறியப்படும். காலமுறைப்படி நோக்கின், இசைவல்லார் கையாளும் கருவிகளுள் பிந்தினது சிறந்திருக்குமே யன்றி முந்தினது சிறந்திருக்காது. நால்வகை யாழுள் இறுதியது செங்கோட்டியாழாதலின், அது ஏனையவற்றினும் சிறந்ததாயிருத்தல் வேண்டும்.

ஆகவே, யாழ் என்பது தமிழ்நாட்டில் மட்டுமன்றி உலகமெங்கணும் முக்காலும் வழங்கும் நரம்புக் கருவிகட்கெல்லாம் பொதுப்பெயர் என்றும், அச் சொல்லைச் சிறப்புப் பெயராகக் கொண்ட ஒரு தனிக் கருவியும் கடைச்சங்கக் காலத்திருந்ததில்லை யென்றும், அன்றிருந்த பலவகை யாழுள் தலைசிறந்த செங்கோட்டியாழே இன்று வீணை என்னும் வடசொற் பெயர் கொண்டு வழங்கி வருகிறதென்றும், யாழ் வேறு வீணை வேறு என்பது இருவகையில் தவறுன திரிபுக்கொள்கை என்றும், அறிந்துகொள்க. யாழ் என்னும் தென்சொல் பிற்காலத்து வழக்கற்றதினலேயே, முற்காலத்தில் சுரையாழ் என வழங்கியது இன்று சுரைவீணை அல்லது வீணை என உலக வழக்கில் வழங்குகின்றது.

6. "யாழில் விரலுறுகோடு (Finger - board) இல்லை. அதன் குடத்தினின்றெழுந்த நரம்புகள் நேரே அதன் வளைவுக் கோட்டில் கட்டப்பட்டன."

இதற்கு மறுப்பு, ஏனை மறுப்புக்களிலும், திரு. வரகுணபாண்டியஞர் இலக்கியச் சான்றும் மேற்கோளும் காட்டி விளக்கியுள்ள செங்கோட்டியாழின் 18 உறுப்புக்களின் வரணனையுள்ளும், படங்களுள்ளும், கண்டுகொள்க.

"கோடே பத்த ராணி நரம்பே
மாடக மெனவரும் வகையின வாகும்"

"மாட்டிய பத்தரின் வகையு மாடகமுந்
தந்திரி யமைதியுஞ் சாற்றிய பிறவு
முந்திய நூலின் முடிந்த வகையே"

என்னும் பழஞ் சூத்திரங்களையும்,

"மணிகடை மருப்பின் வாளார் மாடக வயிரத் தீந்தேன்
அணிபெற வொழுகி யன்ன அமிழ்துறழ் நரம்பின் நல்யாழ்"

என்னும் சிந்தாமணிச் செய்யுளையும் (722) நோக்குக.

7. "யாழும் வீணையும் இடைக்காலத்தில் இறுதிவரை தமிழ்நாட்டில் பக்கம் பக்கமாயிருந்து வந்தன. மாணிக்க வாசகரின் திருப்பள்ளியெழுச்சியில், இரு கருவிகளும் உடன் குறிக்கப் படுகின்றன. புதுக்கோட்டைத் திருமயத்திலுள்ள திருமால் கோவிலுள் எழுமுனிவர் (சப்தரிஷி) சிலையில் இரு கருவிவடிவங்களும் உடன் பொறிக்கப்பட்டுள. வேத இலக்கியத்துள்ளும் யாழும் வீணையும் பற்றிய குறிப்புள்ளது."

நால்வகை யாழுள் செங்கோட்டி யாழ் சிறந்ததாதலானும், குலப்பிரிவினையால் நேர்ந்த இழிவு காரணமாகப் பாணர் தம் பிழைப்பிழந்து பாண்தொழிலை அடியோடு கைவிட்டமையானும், ஏனை மூன்று யாழ்களும் படிப்படியாய் வழக்கிறந்தன.

ஆரியர் தென்னாடு வருமுன் அல்லது வடசொல் தமிழ் நாட்டில் வழக்கூன்றுமுன், செங்கோட்டியாழ் செந்தமிழ்ப் பெயராலேயே வழங்கி வந்தது. அதன்பின், அதற்கு வீணை என்னும் வடசொற் பெயர் புகுத்தப்பட்டது. சிறிது காலத்தின் பின் தமிழ்ப் பெயர் வழக்கு வீழ்ந்தது. அதன் பின்னர், செங்கோட்டியாழ் வீணை என்னும் வடசொற் பெயராலும், இசை யெளியார் கையிலுள்ள பன்னரம்பு வில்யாழ் யாழ் என்னும் தமிழ்ப் பெயராலும், வழங்கி வந்தன. இடைக்காலத்தின் பின், அவ்வில் யாழும், கருவியும் பெயரும் ஒருங்கு வழக்கு வீழ்ந்தது. பண்ணிசைத்தற்குரிய பண்டை யாழ் வகைகளுள், செங்கோட்டி யாழ் ஒன்றே இன்று சிறிது உருக்கரந்தும் பெயர் மாறியும் வழங்கி வருகின்றது. தமிழநாகரிகப் பழக்க வழக்கங்களுள்ளும் பொருள்களுள்ளும், தலைசிறந்தவற்றைத் தழுவிக்கொண்டு அவற்றைத் தமவாகக் காட்டுவது, ஆரியர் வழக்கம்.

செங்கோட்டியாழ் வீணையெனப் பிரிக்கப்பட்ட பின்னெழுந்த நூல்களிற்சில, வில் யாழையும் செங்கோட்டியாழை யும் முறையே 'யாழும் வீணையும்' என உடன் கூறுகின்றன. திருமயம் சிலை இக் கொள்கை பற்றியதே. எந்நாட்டிலும் உயர்ந்த கருவியுடன் தாழ்ந்த கருவியும் பயில்வது இயல்பு. மதங்கம் (மிருதங்கம்) இருக்கும்போது கஞ்சிராவும், வீணை யிருக்கும்போது புல்புல்தாராவும் வழங்குதல் காண்க. 'யாழ்' 'வீணை' என்னும் பெயர்கள் அடுத்துவரும்போது, அவற்றுள் ஒன்று மிடற்றிசையைக் குறியாவிடின், முன்னது வில்யாழை யும் பின்னது செங்கோட்டியாழையுமே குறிக்கும்.

ஆரியர் கி. மு. 1500 ஆண்டுகட்கு முன்பே தமிழ் நாட்டிற் சிறுசிறு குடும்பங்களாகக் குடியேறிவிட்டதனால், வேத இலக்

கியத்தில் யாழும் (வில் யாழும்) வீணையும் (செங்கோட்டியாழும்) பற்றிய குறிப்பிருப்பது வியப்பன்று.

முல்லை நாகரிக நிலையிலிருந்த நாடோடிகளான வேத ஆரியர் இந்தியாவிற்குள் புகுமுன்னரே, தமிழ் முத்தமிழாய் வழங்கிற்றென்பதையும், தமிழ் நாகரிகம் பனிமலை (இமயம்) வரை பரவியிருந்ததென்பதையும், நினைவிலிருத்துதல் வேண்டும்.

பண்டைக் காலத்தில் யாழ் என்னும் தமிழ்ப் பெயர் நரம்புக் கருவிகளையெல்லாம் குறித்தவகையையொட்டி, இன்று வீணை என்னும் வடசொற் பெயரும் ஒரு கம்பியுள்ள இரப்போன் யாழ் முதல் எழு கம்பியுள்ள செங்கோட்டி யாழ் வரை எல்லாக் கம்பி யிசைக்கருவிகளையும் குறித்து வருகின்றது.

செங்கோட்டியாழ் வடசொற் பெயர் பூண்டபின் தமிழ்ப் பெயரை யிழந்தமைக்கு, முதுகுன்றம் மறைக்காடு முதலிய தமிழ்நாட்டூர்கள் முறையே விருத்தாசலம் வேதாரணியம என வடமொழிப் பெயர் பூண்டபின் தம் தமிழ்ப் பெயர்களை யிழந்தமை சிறந்த ஒப்பனையாம். அவ்வூர்கள் தொன்றுதொட்டுத் தமிழ்நாட்டைச் சேர்ந்தனவாயுள்ளமை அனைவரும் அறிவர். ஆயினும், அவற்றை வடசொற் பெயராலன்றித் தென்சொற் பெயராற்குறிப்பின், இன்று புலமக்கள் தவிரப் பொது மக்கள் பொருளறியார்.

8. "பண்டைத் தமிழ்யாழ் வீணைபோன்றிருந்ததாயின், ஒவ்வொரு யாழிசைஞனும் விலக்க வேண்டியிருந்த 'அதிர்வு' என்னுங் குற்றத்திற்கு எங்ஙனம் காரணங்காட்ட முடியும்? யாழின் மெலிவு நரம்பைத் தெறித்தபோது அது ஏனை நரப்பிசையினின்பம் நுகரப்படாதவாறு அதிர்ச்சியை உண்டு பண்ணியதாதலின், அதை உடனே நிறுத்துதற்கு யாழோன் கையில் ஒரு கோல் இருந்தது. இக் கோலுருவம் அமராவதி யாழோன் சிலையில் பொறிக்கப்பட்டுள்ளது."

பேரியாழ் முதலிய மூன்றியாழ்களிலும், ஒலி பெருக்குறுப் பாகத் தரப்புச்சித்தாரில் பண்மொழி நரம்பிற்குக் கீழ் அமைத்திருக்கும் அதிர்வு நரம்புகளைப்போல், சில அதிர்வு நரம்புகள் அமைக்கப் பெற்றிருந்தன. பண்மொழி நரம்புகளை இசைக்கும் போது, அவ் அதிர்வு நரம்புகள் ஒலி பெருக்குவதுடன் அதிர்வையும் உண்டுபண்ணும். யாழ் இசைப்பவரின் தேர்ச்சிக்குத் தக்கவாறு அவ் அதிர்வு குறையும், அல்லது நீங்கும். இத்தகைய அதிர்ச்சி அல்லது இரைச்சல் நிகழாதவாறு, ஒவ்வோர் யாழிசைஞனும் காத்துக்கொள்ள வேண்டியிருந்தது. இவ்வதிர்ச்சி அதிர்வு நரம்புகளால் நேர்ந்ததேயன்றி யாழால் நேர்ந்ததன்று.

இவ்வதிர்வு நரம்புகளால் இனிமை கெடுகிறதென்றறியப் பட்டபின், பேரியாழிலிருந்த 14 அதிர்வு நரம்புகள் மகரயாழில் 12 ஆகவும் சகோடயாழில் 7 ஆகவும் குறைக்கப்பட்டு, இறுதி யில் செங்கோட்டியாழில் அடியோடு விலக்கப்பட்டன.

மேலும், நரம்பின் அதிர்வு யாழின் மரக்குற்றத்தாலும் பிறக்கும். இதை, 'நரம்பினிசையாற் பிறந்த பொல்லாமை' யாவன :

"செம்பகை யார்ப்புக் கூட மதிர்வு"........
"அதிர்வெனப் படுவதிழுமென லின்றிச்
சிதறி யுரைக்குந ருச்சரிப் பிசையே"

என்பன.

இவை மரக்குற்றத்தாற் பிறக்கும் ;

"நீரிலே நிற்றல் அழுகுதல் வேதல் நிலமயங்கும்
பாரிலே நிற்றல் இடிவீழ்தல் நோய்மரப் பாற்படல்கோள்
நேரிலே செம்பகை யார்ப்பொடு கூடம் அதிர்வுநிற்றல்
சேரினேர் பண்கள் நிறமயக் கம்படும் சிற்றிடையே."

என்னும் நச்சினார்க்கினியர் உரையான் (சிந்தாமணி, 718, 719) அறிக.

யாழோன் கையிலிருந்த கோல், அவன்தன் யாழ்ப் புல மையை அரங்கேற்றிய காலத்து அவனுக்கு அளிக்கப்பட்ட வரிசைச் சின்னமேயன்றி, மெலிவு நரம்பதிர்ச்சியைத் தடுக்கும் இசைக்கருவி யுறுப்பன்று. மாதவி தன் ஆடல்பாடலை அரங் கேற்றித் தலைக்கோற்பட்டம் பெற்றாள். அப்பட்டம் ஒரு கோலுடன் கொடுக்கப்பெறுவது. அக்கோல் தலைக்கோல் எனப் படும். தலைக்கோல் இசைநாடகக்கலையில் தலைமை குறிக்கும் கோல். 'தலைக்கோல் தானம்' 'தலைக்கோலாசான்' 'தலைக் கோலரிவை' முதலிய வழக்குகளை நோக்குக.

9. "வீணை ஒருகாலும் தமிழ்நாட்டிலிருந்ததில்லையென்று நூலாசிரியர் கூறுகின்றார்."

செங்கோட்டி யாழினும் வேறாக வீணையென்றொரு சிறந்த கருவி ஒருகாலும் தமிழ்நாட்டிலிருந்ததில்லை என்பது ஆசிரியர் கருத்தேயன்றி, வீணையே ஒருகாலும் தமிழ்நாட்டிலிருந்ததில்லை என்பதன்று.

10. "21 நரம்புள்ள பேரியாழிலும் பண்மொழி நரம்பு கள் ஏழேயாகவும் ஏனையவெல்லாம் அதிர்வு நரம்புகளாகவுமிருந் திருப்பின், அதற்குப் பெரும் பத்தர் எதற்கு? இசைபெருக்க அதிர்வு நரம்புகளே போதுமே !"

முற்கால மக்கள் உருவத்திற் பெரியவராயிருந்ததினால், அவர் கையாண்ட கருவிகளெல்லாம் பெரியனவாகவே யிருந்தன. மக்கள் உருவம் வரவரச் சிறுத்துவருவதினால், அவர்கள் கையாளும் பலவகைக் கருவிகளும் சிறுத்துவருகின்றன. பேரியாழ் மிகப்பழையதாதலின், அது முதுபழங்கால மக்கட்கேற்றபடி மிகப்பெரியதாயிருந்திருக்கின்றது. அது நால்வகை யாழில் முதற் குறிக்கப்பெறுவதற்கு அதன் பழைமையே காரணம். கடைச்சங்கக்காலத்திலும் அது வழங்கினதாகக் கூறப்படினும், அது உருவத்திற் பெரியவர்க்கே உரியதாய் அருகினவழக்காகவே வழங்கினதாகத் தெரிகின்றது.

அதிர்வு நரம்புகளால் இசையைப் பெருக்கலாம் என்ற எண்ணம் உண்டானபின், பெருங்கலம் என்னும் பேரியாழில் முதன்முதலாக அதிர்வு நரம்புகள் சேர்க்கப்பட்டிருத்தல்வேண்டும். ஆகவே, அவ் யாழில் பெரும்பத்தர் முந்தினதும் அதிர்வுநரம்பு பிந்தியதுமாகும். தலைச்சங்கக்காலத்து மக்கள் தம் உடற் பருமனுக்கேற்றபடி, இயல்பாகவே பெரும்பத்தர் அமைத்திருத்தல் வேண்டும். பிற்காலத்துச் சிற்றுருவ மக்களின் சிறியாழ்களோடு ஒப்புநோக்கிய பின்னரே, அதற்குப் பெருங்கலம் அல்லது பேரியாழ் என்று பெருமைச்சொல் அடைகொடுத்துப் பின்னோர் பெயரிட்டதாகத் தெரிகின்றது. முதற்காலத்தில் அது அளவான கருவியாகவே கருதப்பட்டிருக்கலாம். பழங்காலத்திற் பெரு வழக்காக வழங்கியதாக நூல்களிற் கூறப்படும் மத்தளம், அதன் பருமை காரணமாக இன்று பயன்படுத்தப்படாமல் சில சிற்றூர்களிற் பதுங்கிக் கிடக்கின்றது. அதன் சிறுவடிவான மதங்கம் (மிருதங்கம்) இன்று பெருவழக்காயுள்ளது. இங்ஙனமே, பேரியாழ் சிறியாழ் நிலைமைகளும் கடைச்சங்கக் காலத்தில் இருந்திருத்தல்வேண்டும்.

பேரியாழினும் பேரியாழான ஆதியாழ் (பெருங்கலம்) வேறு; நாரதப் பேரியாழ் என்பதும் வேறு.

"பெருங்கலமாவது பேரியாழ்; அது கோட்டினதளவு பன்னிருசாணும், வணரளவு சாணும், பத்தரளவு பன்னிருசாணும், இப்பெற்றிக்கேற்ற ஆணிகளும் திவவும் உந்தியும் பெற்று, ஆயிரங் கோல்கொடுத்தியல்வது; என்னை? "ஆயிர நரம்பிற்றாதி யாழாகும் - ஏனை யுறுப்பு மொப்பன கொளலே—பத்தரளவுங் கோட்டினதளவும்—, ஒத்த வென்ப இருமூன் றிரட்டி-வணர்சாணொழித்தென வைத்தனர் புலவர்" என்பது அடியார்க்கு நல்லார் உரைப்பாயிரம். நாரதப் பேரியாழ் வில்யாழ் வகையாகும்.

இதுகாறும் கூறியவாற்றால், திருமான் வரகுணபாண்டிய ஞர் அவர்களின் பாணர்கைவழி முடிபுகள் அனைத்தும் உண்மையே என்றும், அதற்குத் திருமான் சாம்பமூர்த்தி அவர்கள் வரைந்த மறுப்பு சற்றும் பொருந்தாதென்றும் அறிந்து கொள்க.

குறிப்பு :—வீணை என்னும் பெயர், வடசொல் என இம் மறுப்புரையிற் கூறியுள்ளேன். அது 'விண்' என்னும் பகுதியடியாகப் பிறந்த தென்சொல்லேயென்று மூதறிஞர் துடிசைகிழார் கூறியுள்ளனர். விண்ணென ஒலித்தது, விண்ணென இசைத்தது, விண்ணென இரைந்தது, விண்ணெனத் தெறித்தது என இருவகை வழக்கினும் வழங்குதலானும், 'விள்' என்னும் வேர்ச் சொற்கு ஒலித்தல் சொல்லுதல் என்னும் பொருள்களுண்மையானும், அவர்கள் கூற்றும் ஒப்புக்கொள்ளத்தக்கதே.

இனி, முகவீணை என ஒரு குழற்கருவி யிருத்தலானும், அதன் இசை ஒருவகையில் வீளையை (சீழ்க்கையொலியை) யொத்திருத்தலானும், வீணை என்னும் பெயர் மிடற்றிசையையுங் குறித்தலானும், வீளையென்னும் சொல்லினின்று வீணையென்னும் பெயர் திரிந்ததோ எனவும், ஐயுறக்கிடக்கின்றது.

விண் என்னும் சொல்லினின்று நீட்டல் திரிபாகவோ, வீளையென்னுஞ் சொல்லினின்று போலித்திரிபாகவோ, வீணை யென்னும் பெயர் தோன்றியிருக்கக்கூடியது பொருத்தமே. ஒரு பொருள்பற்றித் தென்சொல்லின் வேறாக வழங்கும் வடசொற் சில, தென்சொல்லினடியாகவே பிறந்திருத்தலின், மேற்கூறிய கூற்று வியப்பிற்கிடமானதன்று.

தி. போ. பழனியப்ப பிள்ளை

குறியா இழப்பு

வித்துவான், தி. பொ. பழனியப்ப பிள்ளை B.O.L. அவர்கள் திருப்பதி திருவேங்கடேசுவரன் கீழ்க்கலை ஆராய்ச்சிக் கழகத் தமிழ் ஆராய்ச்சியாளராய் அரும்பணி செய்துவந்தனர். அவர்கள் அமைதியே உருவாய்த் திகழ்ந்தவர்கள். திருச்சிராப்பள்ளித் தேசியக் கல்லூரி, முன் உயர்நிலைப் பள்ளியாக இருந்தது. அப்பொழுது அதன்கண் தமிழாசிரியராகத் தொண்டாற்றியுள்ளார்கள். பின், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் விரிவுரையாளராகத் திகழ்ந்தனர். இதற்கிடையில் தம் அரும்பெரும் முயற்சியால் கீழ்க்கலை இளம்புலவர்த் தேர்வி (B.O.L.) லும் வெற்றிபெற்றுள்ளார்கள். வடமொழியிலும் பெரும் புலமையுண்டு. கல்வெட்டு ஆராய்ச்சியில் வியத்தகுதிறலினர். பழைய ஏட்டுச் சுவடிகளைப் பிழையறப் படித்துப் படியெடுத்துப் பேணுவதிலும், அச்சிட்டு வெளியிடுவதிலும் உலையாமுயற்சியுள்ளவர்.

அறிவும் ஆற்றலும், நெறிமுறைதவறா நேர்மையும், சீர்மையும் சிவனெறிப்பற்றும் சேரக்கொண்டவர். அடக்கமும் இனிமையும் ஆழ்ந்து எண்ணும் நீர்மையும், மென்மொழியும், "வேட்பமொழிதலும் பிறர்சொற் பயன்கோடலும்" வாய்ப்பப் பெற்றவர். பிறர்தம் பொருந்தாக் கூற்றுக்களை எடுத்து நயம்பெற நடுநிலை தவறாது வடிவுரை புகலாது வாய்மையுற மறுப்புரை வரைவதில் வல்லர். மறுப்புரை வரைவது உண்மை தெருட்டுதற் பொருட்டேயாம். அவ்வாறாயினும், அப்பொருந்தாக் கூற்றுப் புகன்றார்மாட்டும் பேரன்புவாய்ந்தவர். கருத்து வேற்றுமை எழுவது இயற்கை. அதன்பொருட்டு வேறுபட்டாரைக் காய்வது மயற்கை எனக்கொள்ளும் மாண்பினர்.

திருவேங்கடேசுவரன் கீழ்க்கலை ஆராய்ச்சி வெளியீடாகச் சிறந்த முறையில் தாம் அரிதிற்றொகுத்த அரும் பெரும் குறிப்புக்கள் முன்னுரை முதலியவற்றுடன் திருக்குறள் காளிங்கர், பரிப்பெருமாள் இருவர் உரைகளுடன் கிடைத்தவரை அறத்துப்பாலும், பொருட்பால் இன்பத்துப்பால் முழுவதும் வெளியிட்டுள்ளார்கள். இவர்களின் விரிந்த வரலாறு பின்வெளிவரும்.

இப்பெரும் புலவர் எதிர்பாராத நிலையில் 1—2—'51 மாலை 5-10 மணிக்குத் திருப்பதியில் தாம் வாழ்ந்துவந்த இல்லத்து உடல்நீத்து இறைவனடி சேர்ந்து இன்புற்றனர் என்பது கேட்டுப் பெரிதும் வருந்துகின்றோம். இவர்தம் அருமைத் திருமகனார் தி. ப. கதிரேசன் அவர்களுக்கும், குடும்பத்தார்க்கும் எங்கள் பரிவுரையைத் தெரிவிக்கின்றோம. ஆறுதல் எய்துவார்களாக. அவர்தம் ஆவி இறையடிக்கீழ் இன்புற்று வாழ்க.

இரங்கல்

[திருப்பதி கீழ்க்கலை ஆராய்ச்சிக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர், திருவாளர். தி. பொ. பழநியப்பப் பிள்ளை B.O.L. அவர்கள், இறையடி யுற்றமைகுறித்து அவர் மாணவருள் ஒருவராகிய, வித்துவான், செ. வேங்கடராமச் செட்டியார் பாடியவை]

ஆசிரிய விருத்தம்

1. என்படு கின்ற தந்தோ எழில்திரு வேங்க டந்தான் !
என்படு கின்ற தையோ இருந்தமிழ் கற்றார் நெஞ்சம் !
என்படு கின்ற தந்தோ இணையிலாத் தமிழர் நாடு !
மன்படு பழநி யப்பர் மறைந்தமை யறிந்த தாலே.

2. அன்பின துருவம் என்பார் ! அறிவினுக் கெல்லை யென்பார் !
அன்புரை மொழிவர் என்பார் ! ஆய்வுரை பகர்வர் என்பார் !
துன்பிலா மனத்தார் என்பார் ! துகளிலாப் பழநி யப்பர்
துன்புறப் பிரிந்தா ரென்று துடிக்கின்ற மனத்து மாந்தர்.

3. ஆழ்தமிழ்ப் புலமை கண்டோர், ஆயுள்நாள் முழுது மிந்தத்
தாழ்விலாத் தமிழே கற்ற தகவினர் போலு மென்பார் ;
வீழ்வறு மாங்கி லத்தின் விழுமிய நடையைக் கண்டோர்,
வாழ்வுநாள் பழநி யப்பர் மருவுதம் மொழியோ வென்பார்

4. தவமுறு வைண வத்தார் தம்மினு மவர்நூ லாய்வார்
பவமறு சமண நூலைப் பாரிப்பார் சமணின் மிக்குச்
சிவநெறி விளக்குஞ் சைவ சித்தாந்தம் தெளிந்து நாளும்
அவமற நோற்று நின்றே ஆழ்திருப் பழநி யப்பர்.

5. பழநியில் பிறந்தார் பேரும் பழநியென் றழைக்கப் பட்டார்
அழகுறு தமிழில் தேர்ந்தார் ஆயிரம் பரிசு பெற்றார்
பழகினர் ஆங்கிலத்தைப் பரிததனர் பி. ஓ. எல். ஆம்
பழநியே யெனவி ரும்பப் பண்பெலாம் நிறைந்து நின்றார்.

6. வடமொழி பயின்றார் நன்கு வடமொழிப் புலவர் யாரும்
திடமுறக் காணு நூலும் தெரிந்துரை விரிக்க வல்லார்
அடைவுற இசைநூல் கற்றே ஆயிசை வாணர் போலத்
தடையற இராகம் பண்கள் தாளமொ டுரைக்கு நீரார்.

7. பழந்தமிழ் அரசர் அந்நாள் பண்புடன் வரைந்து வைத்த
பழையசெப் பேடு தாமோ பற்பல கல்வெட் டெல்லாம
பிழையற நோக்கி நோக்கிப் பிடுறு பழநி யப்பா
விழைவுறப் புதுமை யாக விரித்துரைத் தனவே யன்றோ.

8. தில்லைப்பல் கலைக்கல் லூரித நிகழ்ந்தனர் தமிழா சானாய்
எல்லைக்கீழ்க் கலையா ராய்ச்சி யிணையிலாக் கழக முற்றார்
இல்லையே நிகரி வர்க்கென் றியம்பிடப் பதித்தார் பன்னூல்
இல்லையே யவரிந் நாளில் எனநினைந் திரங்கச் சென்றார்.

9 தெழிகுர லருவி வீழும் திருப்பதி மலையே! முன்னாள்
வழிவழிப் புலமை சான்ற வளர்தமிழ்ப் புலவன் தன்னை
இழிவறப் பெற்று ளோனென் றிறுமாந்து நின்றாய் இந்நாள்
கழிந்தனர் பழநி யப்பர் கரைந்துநைந் தழுவாய் கொல்லோ.

10. புன்னகை பூத்து யார்க்கும் பொலிவுற வணக்கஞ் செய்தே
இன்னுரை வழங்கி யென்றும் இனியசெய் திடைய றாமல்
மின்னவிர் சடிலத் தானை விழைந்துளம் பற்றி நின்று
துன்னிய பழநி யபபர் தொழுதமிழ்த் தெய்வங் கண்டீர்.

வெண்பா

11 அன்பு வடிவே அறிவாற் பெருங்கடலே
துன்பத் தொடர்வறுக்கும் தூய்மனத்தீர்—இன்பம்
இடையறா நீண்ட இடையூறு மெய்யின்
தடைநீங்கப் பெற்றீரோ தான்.

இங்ஙனம்,

சே. வேங்கடராமச் செட்டியார்.

S. V. O, கல்லூரி, திருப்பதி.

நூலகம்

தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் தலைமைநிலையமாகிய திருநெல்வேலியின்கண் கழகத்தார் அமைத்துள்ள 'சிவஞான முனிவர்' நூல் நிலையத்தைச் சென்னைச் சட்டசபைத் தலைவர், திரு. ஜே சிவசண்முகம் பிள்ளை அவர்கள் பார்வையிட்டார்கள். அப்பொழுது ஒரு பெருங் கூட்டம் நிகழ்ந்தது. அக்கூட்டததிற்கு திரு. வி. எஸ். சங்கரசுப்பிரமணிய முதலியார் பி.ஏ.பி.எல்., எம.எல.ஏ. அவர்கள் தலைமை பூண்டார்கள். திரு. பிள்ளையவர்களுக்குக் கழகத்தாரால் அன்புடன் வரவேற்பு நன்மொழி படித்தளிக்கப் பெற்றது. திரு. பிள்ளையவர்கள் நூல்நிலையத்தைப் பார்வையிட்டுப் பாராட்டினர். சிறப்பாக வரவேற்றமைக்கு மகிழ்ந்து சில அறிவுரை பகர்ந்தனர். அது, சென்னை அரசியலார் தமிழுக்கும் பேராதரவு கொடுத்துவருகின்றனர். பிறநாடுகளில் மக்கள எத்தனையோ மொழிகளைக் கற்கின்றனர். நாமும் அவ்வாறு கற்கவேண்டும். பிறமொழிகளைக் கற்க வேண்டா எனக் கூறுவது விரும்பத்தக்கதன்று. தமிழாசிரியர்களில் (எல்லோரும் அல்ல) ஒருசிலர் குடியரசுக்கு மாறுன கொள்கைகளையும், பாழ்ங் (நாத்திகக்) கொள்கைகளையும் மாணவரிடையே பரப்புவது பொருத்தமற்றதாகும் என்பதே.

தலைமை பூண்ட திரு. முதலியாரவர்கள தமிழாசிரியர்களிற் சிலர் பாழ்ங் கொள்கைகளை மாணவரிடையே பரப்பி வருகின்றனர் என்றால், அதற்குக் காரணம் அவர்கள் அன்று. அவர்களுக்குக் கடவுட் கொளகையையும, அதன் இன்றியமையாமையையும் வற்புறுத்துக் கற்பிக்காத கல்வி முறையின்—ஆட்சிப் பொறுப்பின் குறையே காரணமாகும். அரசியலார் சமயத்துறையில் தலையிடுவதில்லையென்று கூறி நிற்பது பொருந்தாது. தனிப்பட்ட சமயங்களைச் சார்ந்து நிற்பதுதான் தவறு. பொதுநெறியாகிய கடவுட் கொள்கையைக் கடைப்பிடித்து நிற்பது கடப்பாடேயாம். கடவுட் கொள்கையின்றேல் அறமுறை திறம்பும். ஆகவே, கடவுட் கொள்கைகளை ஆசிரியர்கட்கு உணர்த்தி அவர்கள் வழி மாணவர் உலகத்துக்குப் பரப்புதல் வேண்டும். அதற்கேற்ற பாடப்பிரிவில் சிறுகால வரையறையும் நூலும் அமைக்க வேண்டும். வெளிநாட்டாரால் மேற்கொள்ளும் கல்லூரிகளில் அம்முறை நிகழ்வதும் காணலாம் என்றனர்.

திரு. பிள்ளையவர்கள் அவ்வுரையை மனமார ஏற்றுத் தாங்கள் கூறுவது நல்லதே. அதை நிகழப்போகும் சட்டசபைப் பொருள்நிலைக் கூட்டததில் தாங்கள விளககிப் பேசுங்கள். அதற்கென அரைமணி நேரம் நல்குகின்றேன் என்றார்கள்.

கழக ஆட்சிப் பொறுப்பாளர், திரு. வ. சுப்பையா பிள்ளையவர்கள் நன்றிகூறுமுகத்தால் பிள்ளையவர்களையும், தலைவரவர்களையும் பாராட்டிப் பேசித் "தமிழாசிரியர்களின் தவறுதலான நிலைக்குக் காரணம் அவர்கள்பால் அன்று, கல்வியின் பாலதே என்பதை யானே கூறவேண்டுமென்று கருதியிருந்தேன். அதைத் தலைவரவர்களே கூறினார்கள். அதுவே பல்லாற்றானும் சாலப் பொருத்தமானதாகும். திரு. பிள்ளையவர்கள் கழகத்தின் செயலைப் பாராட்டி ஆதரவும் நல்லெண்ணமும் என்றும் பூண்டுள்ளார்கள். இன்றும் நம் வேண்டுகோளுக் கிணங்கிக் கழகத்தையும் நூல்நிலையத்தையும் பார்வையிட்டுக் கட்டுரை வழங்கினார்கள். அவர்கட்குக் கழகத்தார் நன்றி என்றும் உரித்தாகுக. தலைவர் அவர்கட்கும் அவையோர்கட்கும் நன்றியுரித்தாகுக," என்றனர். கூட்டம் இனிது நிறைவுற்றது.

இரவு கழகநிலையத்தில் திரு. பிள்ளையவர்களுக்கு ஒரு விருந்து அளிக்கப் பெற்றது. அவ்விருந்தில் அன்பர்கள் முப்பதின்மர் கலந்துகொண்டனர்.

பொதுநெறி

செந்தமிழ்த் தொன்னூல்களில் கடவுட் கொள்கைகளைப் பொதுமையுறக் கூறுவனவே பெரும்பான்மை. எடுத்துக்காட்டாகத் திருக்குறளில் கடவுள் வாழ்த்தை எடுத்துக்கொண்டால், கடவுள் உண்மையைக் கடைப்பிடித்து வழிபடுவதே கற்றபடி நிற்கும் கல்விப் பயன். அன்பால் நினைவார் உள்ளமே ஆண்டவன் அமருங்கோவில். விருப்பு வெறுப்பிலாமை அன்பெனப்படும். அத்தகைய அன்பே கடவுள். இயல்பாகவே கட்டற்றுக், கட்டுற்ற உயிர்கட்குக் கைம்மாறு கருதாது கட்டறுத்துத் தன்பாலுள்ள பேரின்பத்தை நல்கிப் புகழ்பெறுபவன் கடவுள். பொறிவழியில்லாப் புலனடக்கியவன் கடவுள். அவன்தாள் சேர்தலே அளவில் இன்பம்.

—இனியன்

எண் பெரும் நினைவாற்றல்

இவ்வாற்றலை அட்டாவதானம் என்ப. இஃது ஒரேநேரத்துப் பல்வேறு பொருள்களில் தொடர்நினைவு வைத்துப் பொருள் முடித்துக் காட்டுவது. பெரியார், திரு. தி. ப. சுப்பிரமணிய தாசு அவர்கள் பெருநாவலர் அருளிய திருக்குறள் என்னும் ஒரு நூற் கண்ணே இ அமைத்துக்காட்டித் தம பேராற்றலும் பெரும் புலமையும் பல்வேறிடங்களில் பல காலமாக நிலைநாட்டி வெற்றியும் பரிசும் பெற்று ருகின்றார்கள்.

அவர்கள் 4-2-51 ஞாயிறு காலை ஒன்பது மணிக்குக் கோகலே மண்டபத்திற் கூடிய பேரவையிலும் எண்பெரும் நினைவாற்றலை வண்மையுற நிகழ்த்தினார்கள். திரு. சொல்லின் செல்வர், ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் விழாவைத் துவங்கி வைத்தார்கள். திரு. பன்மொழிப் புலவர், தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் அவைத் தலைமை பூண்டார்கள். துவக்கத் தலைவர், அட்டாவதானம் என்னும் சொல் வடமொழியாயினும் பண்பு தமிழருடையதே. திருக்குறள்உணர்ச்சி மிக்குவளரும் இக்காலத்து இத்தகைய வியத்தகு அருஞ்செயல் கற்பார்க்குப் பேருதவியாக இருக்கும் என மொழிந்தார்கள்.

அவைத் தலைவரவர்கள், தமிழ் நாடும் தமிழரும் முன்னேறிச் செல்லும் காட்சியால் 'தமிழ் வாழ வேண்டும்' என்னும் உண்மை உரமுடைய எம்மனோர்க்கும் வேட்கையும் வியப்பும் உறுதியும் எற்படுகின்றன. தமிழ் எடுகள் பல செல்லரித்துப் போயின. திருக்குறள் தப்பியது தவப்பயனே என்றனர்.

தென்னிந்தியத் தமிழ்ச் சங்கச் செயலாளர், திரு. வ. சுப்பையா பிள்ளையவர்கள், அவைத் தலைவரவர்கள், மாணவர்கள், புலமை நிரம்பிய இருபெரும் பாலார் பலரும் திருக்குறள் திருமறைக்கண் பல்வேறு வகையாகக் கேள்விகள் கேட்டனர். அவற்றிற்கெல்லாம் தக்கவாறு திரு. தாசரவர்கள் விடைஈந்து வியப்பும் மகிழ்வும் ஒருங்குறச் செய்தார்கள். அவையோரும் அகமிக மகிழ்ந்தார்கள்.

வியந்து பாராட்டி திருமதி. ஆர். இராசரத்தினம் அம்மையாரவர்களும், திருமதி. சீதாலட்சுமி அம்மையாரவர்களும் விரிவுரை ஆற்றினார்கள்.

திரு. கா. சின்னையாச் செட்டியாரவர்கள் நன்றி கூற அவை இனிது நிறைவுற்றது.

செய்திகளும் குறிப்புகளும்

ஆசிரியர்கள் தமிழ்ப் பயிற்சிக் கல்லூரி

இக்கல்லூரி, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம் லிமிடெட், 24, கீழ ரத வீதி, திருநெல்வேலி என்னுமிடத்தில் இக்கழக அறநிலையங்களுள் ஒன்றாகிய தென்னிந்திய தமிழ்ச்சங்கச் சார்பில் நடைபெறுகின்றது.

சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் பட்டத் தேர்வுக்குரிய பாடங்கள் முறையாகப் பெருநாவலர் முதலிய பேராசிரியர்களால் நடத்தப்பெறுகின்றன. தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி இவற்றில் பணிபுரியும் இருபால் ஆசிரியர்களும் சேர்ந்து கல்வி பயிலலாம். விளக்கங்களும் விண்ணப்பத்தாளும் விழைவோர் மேற்குறித்த முகவரிக்கு எழுதுக. இவ்வாய்ப்பை எல்லாரும் பயன்படுத்திக்கொள்க.

ஆண்டு விழா

சென்னை மாணவர் மன்றத்தின் 19-ஆவது ஆண்டுவிழாச் சிறப்புற 8-2-51-ல், வி. பி. மண்டபத்தில் நிகழ்ந்தது. திரு. டாக்டர். சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியாரவர்கள் தலைமை பூண்டார்கள். பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் மறைமலையடிகளாரின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்தார்கள். வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பெற்றன. மன்றத் தலைவர், டாக்டர் தருமாம்பாளுக்கும், புலவர், மயிலை சிவமுத்து அவர்களுக்கும் அன்னவர் அறுபதாண்டுப் பிறப்பை முன்னிட்டு வாழ்த்திதழ்கள் படித்து வழங்கப்பெற்றன.

திரு. செட்டியாரவர்கள் மொழிந்தவற்றின் சுருக்கம் :

தமிழின் பழம்பெருமையை மீண்டும் உயிர்ப்பிப்பதற்குத் தொல்காப்பிய முதலிய தொன்மைப் பெருநூல்களை நன்றாகக் கற்றுணர்ந்து கைக்கொள்ளல்வேண்டும். அங்ஙனமின்றிப் பழம் பெருமைமட்டும் பேசிக் காலங்கழிப்பதால் பயன் ஏதுமின்று. நம் பழந்தமிழ் நூல்களெல்லாம் முக்காலத்துக்கும் பொருத்தமானவையே. பண்டுரைத்தவாறே இன்றும் செல்லுபடியாகின்றது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் தோன்றிய உலகப் பொதுமறையாம் திருக்குறள் இன்றும் பொருத்தமுற அன்றுபோன்று நின்றுநிலவுகின்றது. இந்நூல் அரசியல் அறிஞர்களுக்கும், சட்ட உறுப்பினர்களுக்கும் வேண்டும் பொருண்மையுடையதாகவும் மிக்க பயனுடையதாகவும் பேருதவியாகவும் இருக்கின்றது. உலகில் ஏனைய இலக்கியங்களெல்லாம் கடவுள், தேவதை முதலியவைகளைப்பற்றியே விரிவாகவும் முதன்மையாகவும் கூறி இருக்க, நம் தமிழ்த்தொல்லிலக்கியங்கள் மக்களைப் பற்றியே கூறுகின்றன என்பதே.

தமிழ்த் திருநாள்

தருமையருள்பெறு நெல்லை அருணகிரி இசைக் கழகம், திருநெல்வேலிச் சந்திப்பு. இக்கழகச் சார்பில் தமிழ்த் திருநாள் ஆண்டுதோறும் தொடர்ந்து ஆறு நாட்களுக்கு மிக்க சிறப்பாக நடந்துவருகின்றது. வழக்கம்போல் இவ்வாண்டிலும் தைத்திங்கள் உஉ முதல் உஎ (4, 9—2—51) முடிய நிகழ்ந்துள்ளது. விழாவின் தொடக்கத் தலைவர், திரு. சு மகராசன் B.Sc, B.L. அவர்கள். (மாவட்ட முறைமன்ற நடுவர், தென்காசி.) கவியரங்கின் தலைவர், திரு. மு. ரா. பெருமாள் முதலியாரவர்கள், எம். ஏ., எல். டி., (நெல்லை மாவட்டக் கல்வி முதன்மையர்.)

பல்வேறு பொருள்பற்றிய பல்பெரும் புலவர்களும், மாணவ மாணவியர்களும் விரிவுரை இசையரங்கு நாடகம் உரையாடல் முதலியவற்றின் வாயிலாகச் செவியுணர்விருந்து சிறப்புற ஈந்துள்ளார்கள். இறையருளால் இவ்விழா ஆண்டுதோறும் ஓங்குக. செயலாளர்களுக்குத் தமிழ்நாடு பெருந்துணைபுரிக. இந்நிகழ்ச்சி நாடெங்கும் பரவுக. தமிழ் வாழ்க.

கல்விப் பெருங்கொடை

கயா கல்லூரிக்கு ஆண்டொன்றுக்கு ரூபா, ஏழாயிரம் வருமானமுள்ள இரு பெரும் கிராமங்கள் மஹாந் ஹரிஹரஜீயர் நன்கொடையாக வழங்கியுள்ளார். நன்றிக்குறியாக அவர்தம் திருப்பெயர் அக் கல்லூரியின் வணிகப் பகுதிக்குச் சூட்டப்பெற்றுள்ளது.

திருஎம்பாவை திருப்பாவை மாநாடு

திருவிடைமருதூர்-ஸ்ரீ சங்கராச்சாரியாரின் பேராதரவுடன் நடைபெற்றது. ஆசாரியார் அவர்களின் சொற்பொழிவு : "சங்கரர், இராமானுசர், மத்வர், நாயன்மார், ஆழ்வார்கள், தாயுமானவர், பட்டினத்தார், இராமலிங்க அடிகள் முதலிய பெருந்தவச் செல்வர்கள் அருள் தோற்றமுற்ற தென்னாட்டில் கடவுள் இல்லையென்னும் பாழ்ங்கொள்கை (நாத்திகம்) யை அகற்றிக் கடவுட்கொள்கையை நிலைநாட்ட இவ்வகைய மாநாடு வேண்டத்தக்கது," என்பதே.

திருஎம்பாவை, திருப்பாவை மாநாட்டில் நாட்டுப்பாடல் கும்மி சிந்து இவைகள் வளரவேண்டும். குழந்தைமுதலே கடவுட்கொள்கை பரவுவதற்குரிய கல்விகள் புகட்டப்பெறுதல் வேண்டும். அயல்நாட்டு வரலாறுகள்—இலக்கியங்களைவிடத், தாய்நாட்டு வரலாறுகளை, இலக்கியங்களைத் தாய்மொழியில் எளிதில் கற்றுக்கொள்வார்கள். ஆகவே, தாய்மொழிக் கல்வியும் கடவுட் கொள்கையும் பள்ளிக்கூடத்தில் ஒருங்கு பயிற்றப்படவேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

நாயன்மார் ஆழ்வார்கள் அருளிய தமிழ்மறைகள் தெய்வத்தன்மை பொருந்தியவை. அவர்களைத் தொழுவோம்; அவைகளை ஓதி உய்வோம். திருஎம்பாவை திருப்பாவை ஊர்வலம், சிறப்பாக நிகழ்ந்தது.

தலைசிறந்த எழுத்தாளர்

அமெரிக்க இலக்கியக் கழகம், தேர்ந்தெடுத்துள்ள தலை சிறந்த எழுத்தாளர் நால்வருள் இந்திய முதலமைச்சர் ஜவகர்லால் நேருவே முதல்வர். ஏனை மூவராவார் இங்கிலாந்து அர்னல்டு ஜே. டாய்ன்பி, பிரான்ஸிச ஆண்டிருகிதே, இத்தாலி இக்னுகியோ என்க.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2/140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர் : வ. சுப்பையா.